உ

கடவுள் துணை.

தமிழறியும்பெருமாள் கதை.

திருப்போரூர்

துளசிங்கநாயகர் குமாரர்,

டி. கோபால் நாயகர்.

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சுயந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1915.

சாதகாலங்காரம்

மூலமும் - உரையும்.

இச்சென்னையின் கண் முன்னோர்கள் அருளிச்செய்தபல சோதிட நூல்கள் உள்ளன அவற்றுள் இரண்டொரு நூற்களே மிக்க பயன்படத் தக்கவைகளும், வரிசைக்கிரமமாகச் செய்யப்பட்டவையுமாகும். அப்படிப்பட்டவற்றுள் சாதகாலங்காரம் என்பது ஒன்று அதற்கு இதுவரைக்கும் உரையில்லாத பெருங்குறையை நோக்கிப்பலரும் என்னைவற்புறுத்தியபடியால் அதற்குத் தக்கவாறு உரையெழுதி பன்னிரண்டு பாகங்களும் நன்றாய் விளங்கும்படி விளக்கி அச்சிட்டிருக்கின்றோம். வேண்டியவர்கள் எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை ரூபா 1 8 0

விலாசம்,

டி. கோபால் அண்டு கோ.,

வேப்பேரி போஸ்ட், மதராஸ்,

உ

சிவமயம்.

தமிழறியும்பெருமாள் கதை.

காப்பு.

சண்பகமேவீசுந் தமிழறிவாடன்பேரிற்
பண்புடனேசெந்தமிழைப்பாடுவதற்-கெண்புவியில்
வேளைவிரித்தெரித்த வித்தகனார்பெற்றெடுத்த
காளைமதக்களிறே காப்பு-

அளகாபுரியென்றொரு பட்டணமுண்டு அதிலே அளகேஸ்வர னென்றொருராஜா இராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்தான் ஏலங்குழலா ளென்றொரு குமாரத்தி பிறந்தாள் அவள் பன்னிரண்டு வயதிலே சகலகலையுங்கற்று வெகு ரூபலாவண்ணிய சவுந்தரி யாய் மிகுந்த செல்வவதியாகிய பன்னிரண்டிலே யுப் பரிகையின் மேலே யிருந்துகொண்டு தன்னுடைய தோழிமாருந் தானுமாகப் பந்து விளையாடிக்கொண்டி ருக்கும்போது பின்னையொரு தேசத்திற் பாடலிபுர மென்றொரு பட்டணமுண்டு அந்தப் பட்டணத்துக்க திபதியான புத்திரகிரி ராசாவுக்குச் சந்தனகுமாரனெ ன்றொரு பிள்ளையுண்டு அவனைப் பள்ளிக்கு வைத்து வித்தைபடிப்பிக்கிற நாளையிலே வித்தை மனதிலே தரி

யாமல் மூடனாய்ச் சிலநாளிருக்கையில் ஒருநாளிராசா வானவன் பிள்ளையைப்பார்த்து இப்படிக்கொத்தகல்வி யற்ற மூடப்பிள்ளை யிருந்தென்ன போயென்னவென்று மனஞ்சலித்துக்கொண்டான் அந்தப்பிள்ளையும் பார்த்து நமக்கு எழுத்துவாசனை யில்லாதபடியினாலே யல்லவோ நம்முடைய தகப்பனார் கோபித்துக்கொண்டாரென்று மனதில் சிந்தாக்கிரந்தனாகப் புரப்பட்டுத்தேசாந்தரஞ் சுற்றித்திரிந்து தேசங்களுடைய புதுமைகளும் பார்த்து ஒருவருஷம் தேசசஞ்சாரம்பண்ணி யதன்பிறகு அளகாபுரிபட்டணத்தில்வந்து அந்தப் பட்டணத்துப் புதுமைகளும் பார்த்து இனியப்பாலே போகவேண்டுமென்று புறப்பட்டு வரச்சே யுப்பரிகையோரமாய்ப்போகிறவ னுப்பரிகையை அண்ணாந்து பார்த்தான் அந்த உப்பரிகையின்மேலே பூரணச்சந்திரன் உதயமானதுபோலப் பந்தடித்துக் கொண்டிருக்கிற இராஜகுமாரத்தியைக் கண்டான் அந்தராசகுமாரத்தியும் பாலசூரியப்பிரகாசமான ராசகுமாரனைக் கண்டாள் கண்டவுடனே யிருவரும் ஒருவர்மீதிலொருவ ரிச்சையானார்கள்.

அப்போ தொருவர்க்கொருவர் பேசக்கூடாதபடியினாலே தானும் வித்தையறிந்தவளான படியினாலே தனது சாதிலேயைவாங்கிச்சைநகத்தாலெழுதிய விப

ரம் இந்தப்பட்டணத்துக்குமேலண்டையில் மண்ணோ ட்டமென்றொரு திருவாசற்சாவடி யிருக்கிறது யதிலே போயிரும் இராத்திரிக்கும்மண்டைக்கு நான்வருகிறே னென்றெழுதி அந்த ஓலையையிந்த இராசகுமாரன்மு ன்போட்டாளவனும் அந்த ஓலையை யெடுத்துக்கொ ண்டு தனக்கெழுந்து வாசனை தெரியாதபடியினாலே ஆர்கையிலாகிலுங் கொடுத்து வாசிக்கச் சொல்வோமெ ன்று புறப்பட்டு தன்னிசசையாய் அந்தத் திருவாசற் சாவடியில் வந்தான் அதிலேயொரு குஷ்டரோகி யிரு ந்தான் அவனிடத்துக்குப்போய் உமக்கெழுத்தினுடை யவாசனை தெரியுமோவென்றுகேட்க அவனும் எனக் கெழுத்துவாசனை தெரியுமென்றுசொன்னான் அந்த ஓலை யைக்கையில் கொடுத்து வாசித்துச் சொல்லுமென்று சொன்னான் அந்த குஷ்டரோகியுமந்த ஓலைக்குள்ளெழு தியிருந்த விவரத்தை மனதில்வைத்துக்கொண்டு அந் தராசகுமாரத்தியைத் தானனுபவிக்க வேணுமென்று நினைத்து மாறுபாடாகச் சொன்னவிதமோ ராசாவே யிந்த அணியாயமான பட்டணத்துக்கு கென்னதுடுக்கு ப்பண்ணியிருக்கிறீரோ தெரியாது இந்தப்பட்டணத்து ராசா உம்மைகண்டவிடத்திலே ஆக்கினிபண்ணச்சொ ல்லிக்காவலாளிகள்கையில் தனதுமுத்திரை மோதிரத் தைக் கொடுத்திருக்கிறா ராமவர்களும்மைத் தேடிக் கொண்டு திரிகிறார்களாம் ஆனபடியினாலே ராசகுமார

த்தியும்மை யிந்தட்சணமே புறப்பட்டோடிப் போகச் சொல்லி எழுதியிருக்கிறாளென்று சொன்னான் அந்த விசேஷத்தை இராசகுமாரன்கேட்டு இது அநியாயமா யிருக்கிறதே நாமென்ன பாவஞ்செய்தோமென்று அவ் விடம்விட்டுப் புறப்பட்டுப் பயந்து ஓடிப்போனான் தன்பின் குஷ்டரோகியு மெழுந்திருந்து ஒருகிளிஞ்சி லோட்டை யெடுத்துக்கொண்டு குளக்கரைக்குப்போய் உடம்பு குளித் துடம்பிலே யிருக்கிறசொறி போகும் படியாகக் கிளிஞ்சிலோட்டினாலே நன்றாகச் சுரண்டிப் போட்டு இலுப்பைப் புண்ணாக்கும் மஞ்சளும்போட்டு த்தேய்த்துக்குளித்து நன்றாகச்சுத்தி பண்ணிக்கொண்டு தன்னுடைய கீழ்த்துணியைத் தப்பியுலர்த்திக் கொ ண்டு இருட்டிலேபின்னஞ் சாவடியிலேவந்து ஒரு மூலை யிலே படுத்துக் கொண்டிருந்தான் இராசகுமாரத்தியு மன்றிராத்திரி இராசகுமாரனுக்குச் சாப்பாடும் அதற் கேற்ற பதார்த்தங்களுங் கந்தகஸ்தூரி பரிமளாதிகளும் ஆடையாபரணங்களும் ஒருபெட்டியில் வைத்துக்கொ ண்டுபெட்டியை யொருதாதிதலையி லெடுப்பித்துக்கொ ண்டு உப்பரிகைக்கு நூலேணி விட்டிறங்கி யொருவரு மறியாமல் இருவரும் புறப்பட்டு அத்திருவாசற்சாவடி யிலேவந்து பார்க்குமளவில் மூலையிலே படுத்துக்கொ

ண்டிருக்கிறவனைக்கண்டு பகல் நாம்கண்ட ராசகுமார
னென்றுசையாகிய காமாந்தகாரத்தினு லோடிவந்தழு
லேயிலிருக்கிற குட்டரோகியைக் கட்டிக்கொண்டாள்
கட்டிக்கொண்டவுடனே அவனுடம்பு மிவளுடம்பிலே
பட்டமாத்திரத்தில் சீழும்இரத்தமுங் கப்படிக்கிறநாத்த
மும் துணியெல்லாம் நனைந்து தண்ணீர் வடிந்து அத்தி
ப்பால் தோய்ந்ததுபோலவும் உடம்பிலேயிருக்கிறசொ
ரிகள் பலாக்காய் முள்தைக்கிறதுபோலவும் இப்படி
யாக யிருந்தது கண்டிவள் சுகியானபடியா லிந்தவேஷ்
டையைப் பொறுக்காமலிவ்வள் பகல்நாம் பார்த்தராச
புத்திரன் அல்ல ஏதோகபடமாச்சுதென் ஏங்கிச்சீவனை
விட்டா ளதைக்கூடவந்த தாதிகண்டு பயப்பட்டுக்கையு
ங்காலு நடுக்கமெடுத்துக்கொண்டு என்னசெய்யப்போகி
றோம் தெய்வமே இந்தச்சேதி இராசாவறிந்தால் நீங்க
ளிந்நேரத்திலிங்கே வந்தகாரிய மென்னவென நம்மை
யாக்கினைசெய்வாரென்று மிகவும்பயந்து பெட்டியிலே
போட்டுக்கொண்டுவந்த பதார்த்தங்களை யெல்லாம் குட்
டரோகிமுன்னே கொட்டிப்போட்டு அந்தப்பெட்டிக்
குள்ளே பிணத்தை யெடுத்துப்போட்டு கட்டிக்கொண்
டு முன்புவந்தவழியே புறப்பட்டு நூலேணி மேலேறி
உப்பரிகைக்குள்ளே போய் கட்டிலின்மீது பிணத்தைப்
படுக்கவைத்து அலறிக்கொண்டுபோய் இராசாவுடனே

சுவாமியென்னமோ தெரியாது இருந்தாற்போ லிருந்து
தங்கள்குமாரத்தி மரித்துப்போனாளென்று சொன்னா
ளந்த விசேடங்கேட்டு ராசாவானவ னோடிவந்து பார்
க்குமளவில் நிசமாய் மரித்திருப்பதைப்பார்த்து என்ன
காரணமோ விஷம்தீண்டிற்றோ இல்லையென்று பேய்ப்
பசாசங்களறைந்து கொன்றதோ ஏதொன்றுங் காணப்
போகாதென்று வெகுவாய்த் தூக்கிக்கொண்டு பொழு
துவிடிந்தபின் பெண்ணைத் தகனம்செய்து செய்யுங்கட
னெல்லாஞ் செய்துமுடிந்ததின்பின் பின்னையின் சில
நாளுக்குப்பின் முன்னாலே பயந்தோடிப்போன இராச
குமார இவ்விராசகுமாரத்தி யிறந்துபோன விசேடங்
கேள்விப்பட்டு அவனுக்கப்போது நினைவுவந்து நமக்
காக மரித்தவள்போல யிருக்கிறது குட்டரோகி மோச
ஞ்செய்து முறுத்தினதை நானறியாம லோடிப்போனே
னே யென்று மிகவும் விகாரப்பட்டு அப்பட்டணமே
வந்து அன்றிராத்திரி சாவடியிற்போய் விஷத்தை வா
ங்கிக்கொண்டு செத்தான் பொழுதுவிடிந்தபிற்பாடு அங்
கேயிருக்கிறபேர் செத்திருப்பவனைப் பார்த்தாரோ பர
தேசி செத்துப்போனானென்று மசானத்திற் கட்டைக
ள் கொண்டுபோய் போட்டு அரசகன்னிகையைத் தக
னம்பண்ணினவிடத்திலே இவனையு மெடுத்துக்கொண்
டுபோய்த் தகனம்பண்ணிப் போட்டார்கள்.

பிற்பாடிந்த இரண்டாவேச்மு மந்தச்சாவடியிலே தங்கள் தங்களிச்சை ஒன்றோடொன்று சேராமல் ஆணு வேசமொரு மூலையிலிருக்கும் பெண்ணுவேசமானது அந்தச்சாவடியிலே ஒருத்தரையுஞ்சேர ஒட்டாமல் பயமுறுத்திஇருக்கும் ஆனபடியினாலே ஒருவருமந்தச்சாவடியிலேவந்து சேரார்களிப்படி ஒருவருஷ காலமாக இதிலே சஞ்சரித்துக் கொண்டிருக்கிற போததற்குப் பிற்பாடு ஔவையார் எங்கையோபோயிருந்து தன்னிருப்பிடத்திற்கு போகவேண்டி வருகிறபோது அந்தப் பட்டணத்துக்குள் வந்தாள் வந்தபோது சாயங்காலமாச்சு தின்றைக்கிங்கே இராத்தங்கிப் போவோமென்று நினைத்து அவ்விடத்திலிருந்த பேரைப்பார்த்துப் படுத்துக்கொள்ள இடங்கிடைக்குமோவென்று கேட்டாள தற்கவர்கள் சொன்ன திந்தப்பட்டணத்துக்கு மேலண்டையாக ஒரு திருவாசற் சாவடியிருக்கிறது அதிலே வேண்டியபேர் படுத்துக் கொள்ளலாமானாலதிலே ஒரு பிசாசு மிருந்துகொண்டதிலே வந்தவர்களை எல்லாமலறந்துப் போடுகிறது ஆகையினாலே ஒருவருமதிலே சேரப் பயப்படுகிறார்களென்று சொன்னார்கள் ஔவையாரானவளிந்த விசேஷங் கேட்போம் பேயையடிக்கப் போகிறதாவென்று வந்து படுத்துக்கொண்டாளந்நேரம் ஆவேச மங்கேயிராமல் வெளியிற்போயிருந்தது ஔவையார் படுத்துக்கொண்டிருக்கிறதைக் கண்டுமிகவும் ஆங்காரத்துடனே யெற்யெற்றென்று அறையவருகிற

தைக்கண்டு ஔவையாரும் அநந்தல் நீங்கி விழித்து அருளிச்செய்த.

வெண்பா.

வெண்பாவிருகாலிற் கல்லானைவெள்ளோலை
கண்பார்த்துக்கையா லெழுதானைப்பெண்பாவி
பெற்றாளேபெற்றாள் பிறர்நகைப்பெற்றாளே
எற்றேமற்றெற்றேமற் றெற்று.

என்றுசொல்லக்கேட்டு அந்தஆவேசம் கல்விகற்ற பேயானபடியினாலே இந்தக்கல்வியின் பொருளையறிந்துகொண்டு நம்முடைய பூருவோத்திர மெல்லாமறிந்துசொன்னாளிவள் தேவியேசரியென்று பயந்துபுறப்பட்டுப்போய் இரண்டாஞ்சாமத்திலேயும் எற்றென்றுவந்தது அப்பவும் விழித்துப்பார்த்து அருளிச்செய்த.

வெண்பா.

எண்ணாயிறத்தாண்டு நீறிற்கிடந்தாலும்
உண்ணீர்மில்லாக் கிடையேபோல்வண்ணமுலைப்
பொற்றொடிமாதர் புணர்முலைமேற்சேராரை
எற்றேமற்றெற்றே மற்றெற்று.

என்றுசொன்ன ஔவையார் சொல்லைக்கேட்டு மீண்டும் பேய்மூன்றுஞ்சாமத்திற்கு எற்றெற்றென்

றுவந்தது அப்போதும் ஔவையார் விழித்துப்பார்த்து அருளிச்செய்த.

வெண்பா.

வானமுள்ளதே தென்மனமுள்ளதேபுந்தி
தானுமுள்ளதே தகையுள்ளதேயீனமுத
மெற்றேறுமிளைத்தே மென்றேமாந்திருப்போரை
எற்றேமற்றெற்றேமற் றெற்று.

என்று சொல்லக்கேட்டு மீண்டுபோய் நாலாஞ்சாமத்திலும் எற்றெற்றென்றும் வந்தது அப்போதும் ஔவையார் அருளிச்செய்த.

வெண்பா.

கருங்குளவிசாக் காட்டிலவன்களிபோல்
வருந்திநிற்குங்கள்ளியர்தம் வாழ்க்கையரும்பகல
பற்றிப்பழம்பொருளைத் தாயத்தார்கொள்வாரென்
றெற்றேமற்றெற்றேமற் றெற்று.

என்றுசொன்னவுடனே இந்தநாலுசாமத்துக் கவியும்பார்த்துக்கொண்டு இந்த ஔவையாருடைய அனுக்கிரகத்தினலே கதிபெறலாமென்று பூர்வ இராஜகுமாரத்தியாக வடிவுகொண்டு ஔவையார்பாதத்திலே சா

ஷ்டாங்கமாகதெண்டனிட்டு கைகட்டிவாய் புதைத்து நின்றபோது ஔவையாரந்த ஆவேஸத்தைப் பார்த்து இதின் வாங்பிரப்பு கேட்க வேண்டுமென்று மனதிலெ ண்ணிக்கொண்டு நீ ஆரென்றுகேட்டபோதந்த ஆவேச மான இராஜகுமாரத்தி சொல்வாள்.

ஏலங்குழலியென்று சொல்வாள் நானும் எனது தோழிமாரும் உப்பரிகையின் மேலேயிருந்துபந்தடித்து க்கொண்டிருக்கிறபோது மறுபட்டணத்தி ராஜகுமார னிந்தப் பட்டணமேவந்து உப்பரிக்கையி ஞோத்திலிரு ந்துஎன்னைப்பார்த்தான் நானுமவனைப் பார்த்தேன் பார் த்து இச்சையானபடியினலே என் காதிஞேலையைவா ங்கி கைநகத்தினு லெழுதியவன் முன்னே போட்டே னவன் எழுத்தறியாதவ னுனபடியினலே இந்தச்சாவடி யில் ஒரு குஷ்டரோகியிருந்தா னவன்கையிலந்த ஓலை யைக்கொடுத்து வாசிக்கச் சொன்னுனந்த ஓலையிலிருந் தவிவரத்தை மனதிலே வைத்துக்கொண்டு என்னைபோ கிக்கலாமென் றெண்ணிக்கொண்டு அந்த இராசகுமார னைப் பயமுறுத்தி யோட்டிவிட்டானந்த குஷ்டரோகி இந்தச்சாவடி மூலையிலே படுத்துக்கொண்டிருந்தா ன தையறியாமல் கட்டியவனை முகந்துக்கொண்டேனவன்

சரீரத்தைப்பார்த்தந்த ராஜகுமாரனல்லவென்று ஏங்கி
சிவனைவிட்டு விட்டேனம்மாவென்று சொல்லக்கேட்டு
ஔவையாரும் நல்லதிப்பாலுனக்கென்னவரம் வேண்
டுமென்றுகேட்க ராசகுமாரத்தி சொல்லுவாள் நான்ம
றுபடியும்ஜனனமெடுத்து நல்லசெல்வதியாய் நானுசை
பட்ட ராசகுமாரனே எனக்குப் புருஷனுகவும் நானவ
னுக்குப் பாரியாகச் சிறிதுகாலம் கூடிவாழ்ந்திருந்து
அப்பால் கதியடையத்தக்கதாக வரந்தரவேண்டுமம்மா
வென்று பின்னையுந் தெண்டனிட்டு நின்றாள் ஔவை
யாருஞ் சந்தோஷப்பட்டு சொல்லுவாள் நீசெத்தவிசே
ஷங்கேட்டந்த ராஜகுமாரனு முனக்காகவந்திந்தச்சாவ
டியலே விஷத்தைத்தின்று செத்தானந்த ஆவேசமுமி
ங்கேதானே யிருக்கிறதென்று சொன்னாளந்த விசேஷத்
தை ஆனுவேசங்கேட்டு ஔவை நம்மையுமறிந்துசொ
ன்னாளிவள் ஈஸ்வரிதானென்று ஆனுவேசம் முன்னிரு
ந்தராசகுமாரன் வடிவாகவந்து ஔவை பாதத்திலே
விழுந்து சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு நின்றான் அப்
போது ஔவை பெண்ணுனு வேசத்தைப் பார்த்து இவ
னுக்குத்தானே நீ யாசைப்பட்டதென்று கேட்க ஆம
ம்மாவென்று சொல்லியதன் பிறகு அந்தப் பெண்ணு
வேசத்துக்கு ஔவையனுக்கிரகம் பாலித்திவ்வரம் உன
க்குபிரமதேவன் விதித்தது ஐம்பது வயதுண்டதிலே

பன்னிரண்டுவயது கன்னியாயிருந்தாய் ஒருவருஷம் ஆவேசமாயிருந்தாய் ஆகப்பதி மூன்றுவயது சென்ற இன்னமுனக்கு ஆயிசு முப்பத்தேழுவருஷ மிருக்கின்றது.

இதிலே உனக்கு இருபத்தைந்துவயதளவுங் கன்னிகழியகாரணமில்லை ஆனபடியினாலே தெற்கேஉறையூரென்றொரு பட்டணமுண்டு அதிலேகரி காலச்சோழன்ராச்சியபரிபாலனம் பண்ணிக் கொண்டிருக்கிறானவனிடத்திலே ஆலாத்திப்பெண்கள் பன்னீராயிரம்பெண்ணுண்டந்த மரகதவடிவி வயிற்றிலே நீபோய்வெகு எவ்வாரரூப சவுந்தரியத்துடன் பிறக்கப்போகிறாய் நீ பிறந்தவுடனே பட்டணமெல்லாஞ் செண்பகப்பூவாசனை பரிமளிக்குமப்போது சோழராஜன் மகளதிசயப்பட்டு உன்னைசண்பகவடிவி என்று பேரிடுவாளந்தப் பேறைக் கொண்டு வளறுகிறநாளிலே உன்னுடையரூபாதிசயத்தைக் கேள்வியுற்று சந்தோஷப்பட்டு சோழமகாராசனானவன் நீபிறந்தபோது பின்னையும் பெண்கள்பிறந்ததுண்டோவென்று விசாரிக்கும்போது பன்னீராயிரம் பெண்கள் வயிற்றிலும் பன்னீராயிரம் பெண்குழந்தைகள் பிறந்திருக்கின்ற தென்றுசொல்வார்க ளந்தப்பெ

ண்இவளையுமுன்னையு மெடுத்துவரச் சொல்லிலட்சண க்காரரையழைப்பித்து லக்ஷணம் பார்க்கச் சொல்லிய வர்கள் லட்சணம்பார்த்து நன்றாயிருக்கிறதென்றுசொ ல்லுவார்களப்போது உன்னைப்பெற்றதாய் மரகதவடி வியை யழைப்பித்து உன்னை நன்றாகவளர்க்கச்சொல்லி கட்டளையிட்டு உன்னைஅஞ்சுவயதிலே ஆடல்பாடலுங்க ற்பித்திருக்கிற நாளையில் பன்னிரண்டுவயது பக்குவ மாய்வெகுரூப வதியாயிருப்பாய் ஒருநாளையதினத்தி ல்சோழராச னுன்னையழைப்பித்து நீகற்றிருக்கிறவித் தைஆடல்பாடல்களெல்லாம் பார்ப்பான் தமிழில்வெகு மிச்சமாயிருப்பாயானபடியினாலே சோழமகாராசன்சந் தோஷப்பட்டிவள் தமிழுக்குரியவளென்றும் இன்று முதற்கொண்டு சண்பகவடிவியென்கிற பெயரைவேண் டாமென்றுமாற்றித்தமிழறியும் பெருமாளென்று பெய ர்கொடுத்திருக்கச்சே சோழமகா ராசனுடனேசொல்லி க்கொள்வாய் ஐயாவேஎன்னுடனே கல்விப்பிரசங்கம்ப ண்ணியென்னிலுங் கவிமிச்சமானவனைச்சேருவேனுகா தபேர்களைத் தள்ளிவிடுவேன் எப்படிக்கொத்தமன்னர் மண்டலீகர்வந்தாலும் வந்தவர்கள்கையில்முந்தி ஆயி ரம்பொன்வாங்கிக்கொண்டு அதன்பிறகு ஒரு கவியைச் சொல்லி அந்தக்கவிக்குப்பொருள் சொல்லவகையறியா மல்விட்டா லவனை அடித்து ஓட்டிவிட்டு கன்னிகழியா

மலன்றைக்காயிரம் பொன்வாங்கிக்கொண்டு உண்டுசுகி
த்திருப்பாயென்று சொல்ல அப்போது இராசாவும் சந்
தோஷப்பட்டு அப்படியே நீ கிர்த்தியடைந்திருந்தால்
போதும் போதுமென்று சொல்லி அப்போதுனக்குவே
றே அரண்மனைக்கு ஏழுமதிலு மறுபத்துநான்கு வாச
லும் வாசலுக்கு வாசல் விநோதம்பண்ணியிருக்கிறவா
சலுங் கற்றுச்சொல்லிப் பெண்களிருக்கிற வாசலுஞ்
சூத்திரபதுமை யிருக்கிறவாசலும்புலியிருக்கிற கரடி
யிருக்கிற வாசலும் யானையிருக்கிற வாசலுங்குரங்கிருக்
கிறவாசலும் வேட்டைநா யிருக்கிறவாசலும் கிண
றிருக்கிற வாசலும் அந்தக்கிணற்றிலே யிருந்தால்
சூத்திரப்பலகை மேலேமூடிக்கொள்ளவும் அதுகடந்
து அப்புறம்போனால் குங்குமச் சேறிருக்கிறவாசலும்
அந்தக்குங்குமச்சேற்றைக் கடந்தவன் கால்கழுவ ஆ
யிரக்கு பனிநீர்வெள்ளித்தட்டில் அக்கரையிலேவைத்
திருக்கிறதுஞ் சித்திர மண்ட பங்களும் பாரதம்
இராமாயணம் அரிச்சந்திரன்கதை நளமகாராசன்
கதை இப்படிக்கொத்த விசித்திரங்க ளெழுதியிருக்
கிற மண்டபங்களும் நீராழிமண்டபமும் பளிங்கு
மாமண்டபமுந் தமிழறியும் மண்டபமும் இயலறி
யும் மண்டபமும் இசையறியும் மண்டபமும் கூத்து
ப்பார்க்கிற மண்டபமும் இவைக ளெல்லாம் அ

மைப்பித்து இதற்கப்பால் கோழியுடனே சேவலைக் குத்துக்கு விடுகிறவாசலும் ஆட்டுக்கடாக்களை பாய்ச்சலுக்கு விடுகிறவாசலும் நாடகசாலை வாசலும் அப்பால் நடுமத்தியிலே வெகு அலங்காரமான கச்சேரி மண்டபமும் அதன்மத்தியிலே களிற்று யானைத்தந்தக் கட்டிலும் பெட்டை யானைத்தந்தக் கட்டிலும் தூங்கு மஞ்சமாகச் சோடித்து அந்தக் கட்டிலைக் கால்மாடு தலைமாடு தெரியாத பாவனையாகப் போடுவித்துத் தலைமாட்டிலே நிலக்கண்ணாடியும் கால்மாட்டிலே சூஸ்திர பதுமைகளும் ஸ்தாபித்திருக்கும் அந்தக்கட்டிலின் பேரிற் கால்மாடு தலைமாட்றிந்து படுத்துக்கொண்டால் அந்தப்பிரதமைகளிலொன்று கால்பிடிக்கவும் ஒன்று விசிறியெடுத்து விசிறவும் சிறிது பாக்குவெற்றிலை மடித்துக்கொடுக்கவும் சிறிது தம்பலப்படிக்க ஏந்தவும் இப்படியனேக காலம் பண்ணிக்கொண்டிருக்கும் ஒருவேளை வகையறியாமல் வந்து கால்மாட்டிலே தலைவைத்துப் படுத்துக்கொண்டால் அந்தச்சூத்திரப் பதுமைகளிலொன்று தலையை வளைத்துப்பிடிக்கும் ஒன்று மூத்திரம்பேயும் ஒன்றுதலையைச்சிறைக்கும் ஒன்று சாணியைக் கொண்டுவந்துதலைமீதில் வைக்கும் ஒன்று விளக்கேற்றிவைக்கும் இப்படி வேண்டிய விகடங்களெல்லா முண்டுபண்ணி வைத்து உனக்குப் பச்சைபல்லக்குங் கட்டளையிட்டு நீ பிறக்கச்சே பிறந்த பன்னீராயிரம் பெண்களையும் உனக்குச்சே

விக்கத் தக்கதாகக் கட்டளைபண்ணி ரதகஜதுரகபதாதிகளையும் நியமித்து இவைகளெல்லா முனக்குச் சரிசமானமாக விருக்கப்பட்ட தோழிமார்களில் இலறியும் பெருமாளென்றும் இசையறியும் பெருமாளென்றும் இரண்டுபேருண்டு அந்தத்தோழிமாரும் நீயுமாகப் பல்லக்கிலேறிக்கொண்டு ஆடல்பாடல் மேளதாளங்கள் முதலாகியவெகு ஆடம்பரத்துடனே காலைப்போதிலும் நல்ல மத்தியான காலத்திலும் சாயங்காலத்திலும் இந்தமூன்றுநேரமுஞ் சோழமகாராசன் கொலுவிற்கும்போய் ஆடல்பாடல் முதலியவைகளைச்செய்து திரும்பும்படியாகக் கட்டளைசெய்து பகலுக்கு மிராத்திரிக்கும்பொழுது போக்கும்படியாகத் தருமகதைகளைக் கேட்கவும் சகல வேத புராணங்களெல்லாங்கேட்கவும் அரதேசி பரதேசிகளுக்கும் அன்னம்பரிமாரவும் அஞ்ஞானமாறவும் போசனம் பண்ணவும் ஆடையாபரணந் தரிக்கவும் கேளிக்கை பார்க்கவும் பளிங்குமா மண்டபத்தில் ஒருசாமம் நித்திரை பண்ணவும் இப்படிசகலவித வாடம்பரங்களும் பாருந்தி யிருக்கத்தக்கதாகச் சோழராசாவானவர்உண்டுபண்ணுவார்.

அந்தப்பிரகார மிந்த மூப்பத்தெட்டு வயதளவும் நீ கன்னி கழியாமல் வெகு யோகசாலியா யிருப்பாய் அந்தந்த காலத்தில் இந்த இராசகுமாரனு அந்தப்பட்டணத்திலே ஒரு விறகுதலையன் மனைவிவயிற்றிலே பிற

ந்து பெரியவனாகி விறகுவிற்று வயிறுவளர்த்துக் கொ
ண்டு திரிவான் இப்படியிருக்கிற காலத்தில் ஒருநாளதி
காலையில் கடைத்தெருவில் விறகு சுமையைச் சாத்தி
வைத்துவிட்டங்கே யுட்கார்ந்துகொண்டிருப்பான் அந்
தச் சமயத்தில் நீ யுனது தோழிமார்களுடனே வெகு
ஆடம்பரங்க சோழ மகாராசன் கொலுவுக்குப்போய்
அங்கே ஆடல்பாடல் செய்து கொலுவைவிட்டுத் திரு
ம்பி நீ அரண்மனைக்குப் போகிறபோது கடைத்தெரு
வின் வழியாவருவாய் அப்போதிந்த விறகுதலையன் நீ
வருகிற வேடிக்கையைப் பார்த்தவுடனே நீ உன்பக்கத்
திலிருந்த தோழிகளையழைத்து அந்தக்கடையி லிருக்
கிறவனைப் பாருங்கள் பாசிப்பல்லுப் பூதமுகமு நீ வெந்
தவீட்டுக் கழிமரம்போலே காலுங்கையும் அரையிற்
சுற்றிய கொடியும் அதிலேசொருகிய அரிவாளுடைய
வனாகவுமிருக்கிறான் இப்படியுமொருவனுலகத்தி லிருப்
பானோ இவ்வளவு லட்சணத்தோ டிருக்கின்றவனையும்
ஒருபெண்பிள்ளையுஞ் சேருவாளோவென்று கேட்பாய்
அதற்குத்தோழியானவள் அம்மா அப்படியேன் சொல்
லுகிறு யூசியுமல்லவோ ஒருசரட்டைக்கோத்துக் கொ
ண்டிருக்கிறது ஆதலால் இவனுக்கும் உலகத்தில் ஒரு
த்தி யிருப்பாளென்று சொல்லுவாள் அந்தவசனத்தைத்
கேட்டு நீயுமிவனைப்பார்த்துக் காரியுமிழ்வாய் அதை
யந்த விறகுதலையன் கண்டு ஸ்திரீசாதியான இவள் நம்

மைப் பார்த்துக் காரியுமிழவேண்டிய காரணமென்ன ஆண்பிள்ளை எப்படியிருந்தா லென்ன நல்லது எப்படியாகிலும் ஆயிரம்பொன் சேகரித்து இவளுக்குகொண்டு போய்க்கொடுத்து இவளைச்சேராமற் போவேனேயாகில் நான் ஆண் பிள்ளையாவேனோ வென்று மனதில் பிரதிக்கினைசெய்துகொண்டு தன்வீட்டுக்குப்போய் அதற்குத் தகுந்த பேர்களுடனே தன்குறையைச்சொல்லி ஆயிரம் பொன்னுஞ் சவதரித்துக்கொண்டு தன்னரண்மனைக்கு வருவான் அப்படிவந்தவன் கையிலாயிரம் பொன்னை யும் நீ வாங்கிக்கொண்டு பிறகொரு கவியைச்சொல்லு வாயந்தகவிக்குப் பொருளறியாமல் விழிப்பானப்போது அந்தத்தோட்டி விடுவாயந்தப்பட்டணத்திலே அவனுக்கு முன்வந்துன்கையி லகப்பட்டுப்போன பேரிருப்பார்களல்லவோ அப்படிப்பட்டவர்க ளண்டைக்குப்போய் முறையிடுவா னதற்கவர்க ளடாபயித்தியக்காரா நீ ஆயிரம்பொன்னல்ல பதினாயிரம் பொன்கொடுத்தாலு முன் காரியமாகப் போகிறதில்லை அவளுடன் கவிசொல்லி யுத்தப்பிரச்சிங்கம் பண்ணத்தக்கினவர்கள் இங்கொருவருமில்லை அவளைவெல்லுதற்கு எவர்களாலுமுடியாது ஆகையால் கவிசொல்லிக் கல்வி வல்லமையினாலே செயித்தால் மாத்திரம் நீ நினைத்தகாரிய முடியும் மற்றப்படிக்குக் காரியமாகப் போகிறதில்லை நீயுஞ்சமர்த்தனானால் மதுரையிலே பாண்டியராசனுடைய சங்கத்தார் சகல

பேரிருக்கிறார்கள் அவர்களிடத்துக்குப்போய் முறை யிட்டுக் கொண்டால் அப்போ தேதாவதொரு வேளை அவர்கள்வந்து அவளுடன் தர்க்கஞ்செய்தால் செய்வா ர்களில்லாவிட்டா லிங்கேயாரு மவளுக்கெதிராளியில்லை ஆகையாலவ்விடம்போம் பிள்ளாயென்று சொல்வார்க ளப்போதந்த விறகுதலையனும் மதுரைக்குப் போய்ச் சங்கத்தாருடன் முறையிடுவான், அதுகேட்டு நற்கீரர் வந்து ராத்திரிப்போதெல்லா மூன்னுடன் பிரதிவாதித் தனுன்னை தோற்கடித்துத் தமிழறியும் பெருமாளென் கிறபெயரை மாற்றிவைத்த தன் பிறகு விறகுதலையனு க்கு உன்னை விவாகஞ்செய்து வைத்துப்போவார், அப் பால் உனக்குப்பிள்ளையும் ஆயுசுபன்னிரண்டு வயதுண் டோ அந்தப்பன்னிரண்டு வருஷமும் நீங்களிரண்டு பே ருங்கூடி வாழ்ந்திருந்து அப்பால்கதியை யடைந்துவாழ் வீர்கள்போங்களென்று ஔவையார் வரங்கொடுத்தாள்.

அதுகேட்டு இரண்டாவேசமும் சாஷ்டாங்கமா கத் தண்டன்சமர்ப்பித்து ஔவையார் கையிலனுக்கிர கம் பெற்றுக்கொண்டுபோயின அப்பால் ஔவையாருந் தன்னிருப்பிடம்போய்ச் சேர்ந்தாள்.

இப்பால் பெண்ணுவேசம் உறையூரில் தேவடியா ளான மரகதவடிவயிற்றில் பிறந்தனள் ஆணுவேசமும் அந்தப்பட்டணத்தில் விறகுதலையன் வயிற்றிற் பிறந்த னன் இவளுக்குத் தமிழறிவாளென்று பெயருண்டாகி

ஔவையார் வரங்கொடுத்தபடிக்கு முன்னூற்சொல்லிய பிரகாரம் சோழமகாராசன் முகாந்தரமாய்ச் சகலபிரதிஷ்டைகளுமுண்டாயின இப்படியாக விருக்கிறநாளில் ஒருநாள் பச்சைபல்லக்கின் மேலேறிக்கொண்டு பணிரண்டாயிரம் பெண்களுஞ்சேவித்துவரப் பகலிற்பந்தம் பிடிக்க வெண்சாமரம்வீச தோழிமார் இரண்டுபக்கத்திலும் தாவிக்கொண்டுவரக் கட்டியக்காரர் கட்டியங்கூறி யெச்சரிக்கைசொல்லப் பதினெட்டு மேளவாத்தியமுழங்கத் தும்புருவீணை கின்னரி சுரமண்டலம் இராவணஸ்திரம்குடமுழா இப்படிக்கொத்த பற்பலவிராம சங்கீத முழங்கிவர வெகு ரூபலாவண்யத்துடன் தாவிய செல்லாங்கண்டு மூர்ச்சையாய் விழுந்திடவுஞ் சோழராசன் கொலுவிற்குச்சென்றவர் திருமுகம்பெற்றுத் திரும்பி வருகிறபோது அந்தவிறகு தலையனைக் கடையிற்கண்டிவணையும் ஒருபெண்பிள்ளை சேருவாளோவென்று காரியுமிழ்ந்தாள் அதையந்த விறகுதலையன்கண்டு பளாபலா நன்றாயிருக்கின்றது இவளாகிறதேது சோழமகாராசன் வீட்டு வெள்ளாட்டிப்பெண் இவளெப்படி யிருந்தாலுந் தேவடியாள்தானே நான் ஆண்பிள்ளையல்லவோ நம்மைப்பார்த்து இவள் காறியுமிழ்ந்த காரணமென்ன இவளுக்கித்தனை கெருவமெப்படிவந்தது அவளுடைய காரியமென்னவென்று கோபித்துக்கொண்டு என்பங்கில் தெய்வமிராமற்போகிறதா எப்படியுமாயிரம் பொன்னைச்சவ

தத்துக் கொண்டிவளண்டைக்குப் போகாமற்போகிற
ளென்று சபதங்கூறிக்கொண்டு தன்வீட்டுக் கது
முதலாய்ப்போகாமற் புறப்பட்டுக் காட்டிற்போய் விற
குவெட்டிக்கொண்டு அந்தக்காட்டிலே யொருமாமரம்
வருஷத்திற்கொருபழம் பழுக்கிறது அந்தப்பழத்தை
ஒரு ரிஷிவந்து அறுத்துச் சாப்பிடுவார் அப்படிக்கொ
த்த மாமரத்தின்கீழே இவ்விறகுதலையன் மெத்தவெயி
லானபடியால்வந்து நிழலிலே படுத்துக்கொண்டிருந்தா
ன் அப்போது அந்தமரத்தில் பழம்பழுத்திருந்தது அந்
தப்பழத்தைக் கண்டறுத்து வீட்டுக்குப்போகிறபோது
சாப்பிடலாமென்று மடியில் வைத்துக்கொண்டிருந்தான்
வெயில் தாழ்ந்தவுடனெழுந்திருந்துபோய்ப் பின்னையும்
விறகு வெட்டிக்கொண்டிருந்தா னன்றைக்கு ரிஷி வந்து
மாமரத்தைப்பார்த்துப் பழமில்லாததைக்கண்டு வருஷா
வருஷந் தப்பாமலிருக்கிற பழமிப்போதில்லாமற்போகு
வானேனென்று அங்ஙனே சற்றிலும் பார்க்கிறபோதி
ந்த விறகுதலையனண்டையில் விறகுவெட்டுகிற சத்தங்
கேட்டு அவனிடத்திற்போ யப்பா இந்தமாமரம் வரு
ஷத்திற்கொரு பழம்பழுக்கும் நான்வந்து பழத்தையறு
த்துச் சாப்பிடுகிறது பின்னையொருவருந் தீண்டுகிறதில்
லை இப்போதிந்தப் பழத்தைக்காணோம் நீயேதாகிலுங்
கண்டதுண்டோ வென்றுகேட்க அந்த விறகுதலையனு

யில்லையென்று சொன்னான் முனீஸ்வரர் சாபமிடப் போருரென்று பயந்து ஐயா வெயிலுக்குப்போய் மரத் தின்கீழேயிருந்தேன் அப்போது நான் அந்தப்பழத் தைக் கண்டருத்திரோ பிற்பாடு சாப்பிடலாமென்று மடியில் வைத்துக்கொண்டிருக்கிறே னிந்தாருமென்று சொல்லிக்கொடுத்தான், அப்போ தந்தமுனியுஞ் சந் தோஷப்பட்டு பழத்தைச்சாப்பிடாமல் வைத்துக்கொ ண்டிருந்து நாம்கேட்டவுடனே யில்லையென்றுசொல்லா மல் கொடுத்தானல்லவா இவன் நல்லவன் இவனுக்கொ ருவரங் கொடுப்போமென்று அவனையழைத்து அங்கே நிற்கின்ற விருக்ஷங்களைக்காண்பித்து இந்தமரங்களனைத்து முனக்குச் சந்தனமரங்களாகக்கடவது இவைகளைவெட் டிக்கொண்டு சென்று விற்றுக்கொள், இந்த மரங்களினு லேயுனக்கு வேண்டிய ஐயிஸ்வரியம்வரும் மகாராசனுக விருக்கப்போகிருயென்று சொல்லிச்சென்ருர் அதன் பிறகு அந்தவிறகுதலையனு மந்தச்சந்தனமரத்தை வெட் டிக் கட்டைகட்டையாகத் தறித்துச் சுமைகட்டிக்கொ ண்டந்தப் பட்டணத்திலுண்டான குடிபடைகள் துரா துரைகள் பதாதிகள் மந்திரிபிரதானி பிராமணர்வர்த்த கர் மற்றுமுள்ளவர்களுக்கெல்லாம் வீட்டுக்கு வீடுதவி ருமல் ஒருகட்டுவிறகும் ஒருசந்தன கட்டையுமாகப் போட்டுவருவான் முன்னுலே விறகுவிற் றன்றைக்கன் றைக்குக் கூலிவாங்கிக்கொண்டுபோய் வயிறுவளர்த்து

க்கொண்டு திரிகிறவன் முன்பு செய்த தெல்லாம்போ
ய்தமிழறியும்பெருமாள் நிமித்தியமாகப் பொன்சேர
வேண்டுமென்று கூலிவாங்காமல் பிச்சையெடுத்து வயி
றுவளர்த்துக்கொண்டு சும்மாபோவான் ஆராகிலும்விற
குகேட்டாலுங் கேளாவிட்டாலும் வலியைக்கொண்டு
போய்வாசல் தோறுஞ்சந்தனக்கட்டையும் போட்டு
வருவானுயாகிலு மழைத்து உனது கூலியைவாங்கிக்
கொண்டு போவென்றால் எனக்குவேண்டியபோது வாங்
கிக்கொள்வேனென்று சொல்லிக்கொண்டு திரிந்தான்
இப்படி இருக்கிறகாலையிலே அந்தப்பட்டணத்துபெரிய
செட்டியார் வீட்டிலிருக்கிற வெள்ளாட்டியானவன் அ
ன்றைக்கு சந்தனக்கட்டையை விறகென்று நினைத்து
அடுப்பிலேவைத்து எரியவிடும்போது அந்தப்பட்டண
மெங்குஞ் சந்தனவாசனை கமகமவென்று பரிமளித்து
செட்டியாறும் அதிசயப்பட்டு மளிகைக்கடையிலிருந்து
ஓடிவந்து தன்வீட்டின் மடைப்பள்ளியறைக்குப் போய்
அடுப்பிலே யென்னத்தைப்போட்டு எரியவிட்டீர்களெ
ன்றுஞ் சந்தனவாசனை வருவானே யென்றுகேட்க அத
ற்குவெள்ளாட்டி சொன்னது நானுரென்று சொல்லு
வேனுரோ ஒருவன்வெட்டியான்போலே யிருக்கின்ற
வன் அவன் நாள்தோறும் ஒரு சுமைவிறகு கொண்டு
வந்து போட்டுப்போவான் அவையெல்லாம் ஒருமூலை
யிலேயிருக்கின்றன அதுகளிற் பெருங்கட்டையை யெ

ரேத்து விறகென்று நினைத்து அடுப்பிலே வைத்தேனிது தான் விவரமென்றும் இதுவுமல்லாமல் அவன்முன்னாலே விறகு கொண்டுவந்துபோட்டு அன்றைக்கன்றைக்குண் டான கூலியை வாங்கிக்கொண்டு போகிறதுண்டு இப் போது என்னமோ தெரியாது கூலிவாங்காமல் விறகை மாத்திரம் போட்டுவிட்டுச் சும்மாய்ப்போகின்றான் நாங் கள் வனையழைத்து கூலியை வாங்கிக்கொண்டு போவென்றால் எனக்குத் தேவையானபோது வாங்கிக்கொண்டு போகிறேன் உங்களுக்கென்னவென்றுசொல்லி இப்படி கூலிவாங்காமல் ஒருமாதம் நாற்பது நாளாகச்சும்மாப் போகிறான் அதென்னமோ தெரியாதையாவென்று சொன்னாள் செட்டியாரந்த விசேஷத்தைக்கேட்டு விற குவிற்றுக் கூலிவாங்கிச்சாப்பிடுகிறவன் கூலிவாங்காமற் சும்மாபோகிற காரணமென்னமோ தெரியாது புதுமை யாகவிருக்கிறது இதனை விசாரித்து அறியவேண்டுமா தலால் நாளைக்கும் நம்முடைய வீட்டுக்கு விறகுகட்டிக் கொண்டுவந்தாலவனை நம்மிடத்திற்கழைத்துக்கொண்டு வாவென்றுசொல்லி அவன் முன்கொண்டு வந்த சந்தன கட்டையின் பாரத்தைப்பார்த்து சந்தோஷப்பட்டு மனி கையிலே போயிருந்தார் மறுநாள் காலமேவந்து விறகு போட்டுப்போகிறபோதுசெட்டியார் வீட்டுத்தாதிகண் டந்த விறகுதலையனை யழைத்துக்கொண்டுபோய்செட்டி யார்முன்விட்டான் செட்டியாரும் விறகுதலையனைப்பார்

த்துநீயார்பிள்ளாயென்றுகேட்டார் ஐயானுன் பரதேசி விறகு விற்கிறவனென்று சொன்னுன் விறகுவிற்றுவயி றுவளர்க்கிறனுனல், கூலிவாங்காமற் சும்மாபோகிறை யாம் அதென்னசொல்லும் பிள்ளாயென்றுகேட்டார் விறகுதலையனும் ஐயா எனக்கொருகாரியமுண்டு அந்த காரியத்தை நீங்கள் செவ்வைப் படுத்திக்கொடுப்பீர்க ளென்று நம்பு கூலிவாங்காமற் சும்மாய்ப் போகிறுனெ ரூன் அந்தக்காரியமென்ன வென்றுகேட்டார் விறகுத லையன் அது காரியத்தைச் செட்டியாருடனேசொல்ல வெட்கப்பட்டிருந்தான் செட்டியார் நல்லவரான தானி தை நாம் பராமரிக்கலாகாதென்று மனதிலெண்ணிக் கொண்டு விறகுதலையனைக்கிட்ட அழைத்துப்பயப்படா மற் சொல்லும்பிள்ளாயென்றுகேட்க, அப்போது விற குதலையன் சொல்லுவான் ஐயா நான் கடையிலே விற சுமையைச் சாத்திவைத்துக் கொண்டிருக்கச்சே தமிழ றியும் பெருமாள் தோழிமாருந் தானுமாக வெகு உல் லாசத்துடனே சோழராசாவினண்டைக்குப் போய்க் கொலுமுகம்கண்டு திரும்பிக் கடைத்தெரு வழியாகத் தன்னரண்மனைக்குப் போகிறபோது வேடிக்கைப்பார்த் துக் கொண்டிருந்தேனப்போது தமிழறியும் பெருமாள் என்னைப்பார்த்து இப்படிவேஷங்குலைந் திருக்கிறவனை யும் ஒரு பெண்பிள்ளையானவள் சேர்வாளோவென்று தோழியைக்கேட்டாளதற்குத் தோழியானவள் அவனு

க்கு மொருத்தியுண்டாயிருப்பாளென்றாள் அந்த விசே ஷத்தைக் கேட்டுத்தமிழறியும் பெருமாளென்னைப்பாரத் துக் காரியுமிழ்ந்தாள் அதுகண்டு நானும் இவள் நம்மை ப்பார்த்து யுமிழவேண்டிய காரணமென்ன நாம் ஆண் பிள்ளை எப்படி இருந்தாலென்ன இப்படிக்கொத்தவளை யே அனுபவிக்க வேணுமென்று நினைத்துப் பொன்னுக் குவழியில்லாதபடியினாலே இந்தவேலைசெய்து கொண் டிருக்கிறேனையாவென்றான் செட்டியாரந்த விசேஷத் தைக்கேட்டு குலுங்ககுலுங்க நகைத்து இவனிருக்கிற வேஷமென்ன அவளிருக்கிறபோகமென்ன தேச தேச ராசராசாக்களெல்லாரும் வந்தடிப்பட்டுப் போகிறார்க ளே இப்படி முடிக்காயிருக்கிறவனண்டைக்கு இவன் போகிய விதமெப்படி ஆனாலுமென்ன இவனுடைய அதிர்ஷ்டானுகூலமெப்படியோ அதுநமக்குத்தெரியாது இதைநாம் ஏன் தடைசெய்யவேண்டுமென்று மனதிலெ ண்ணிக்கொண்டு நல்லது இங்கேயிரும்பிள்ளாயென்று விறகுதலையனை மளிகையிலே வைத்து செட்டியார்தன் வீட்டுக்குபோய் முன்போட்டிருந்த சந்தனக்கட்டைக ளையெல்லாம்பார்த்து அவைகளை விலைமதிக்கும்போது பதினாயிரம் பொன்னுக்கு அதிகமாயிருந்தபடியினாலே சந்தோஷப்பட்டு விறகுதலையனை அழைப்பித்து இன் னம் எங்கே விறகுபோட்டிருக்கிறாயென்றுகேட்க வீட் டுக்கு வீடுதப்பாமற் போட்டிருக்கிறேனென்றான் நல்ல

தென்றுசொல்லிச் செட்டியாரும் இவன் கையிலே விற
குபோட்டுவித்துக் கொண்டவர்களையெல்லாமழைப்பித்
து அவர்களோடு ஆலோசனை பண்ணிக்கொண்டு இந்த
விறகுதலையனை ராஜாவடிவாக வெகுஆடம்பரத்துடனே
அனுப்புவிக்க வேண்டுமென்று எல்லாரு மொன்றாகப்
பேசிக்கொண்டு நாவிதனையழைப்பித்து விறகுத்தலையனு
க்குப்பணி செய்து சம்பங்கி எண்ணெயிட்டுத்தலை முழு
கப்படுத்திக்கடுக்கன் மோதிரஞ்சரப்பளிவெள்ளி அரை
நாணமற்றுமுண்டான ஆபரணங்களும்பூட்டி பச்சை
வட்டந்தோவத்திகட்டிப் பாகைசரலுவை அங்கிநிசாரு
நடுக்கட்டு இவைகளெல்லாந்தரிப்பித்து திவ்வியமான
போஜனமழைத்து களபகஸ்தூரி பரிமளாதிகளும் அணி
யப்பாக்குவெற்றிலையுங் கொடுத்து எக்காளம் மேளம்
பேரிகை பூரிகை முதலான பதினெட்டுவகை மேளவாத்
தியங்களு முழங்கும்படிசெய்வித்து விறகு தலையனை
மன்மதவடிவாக்கி பச்சைப்பல்லக்கிலே வைத்து ஆயிர
ம்பொன் முடிப்புகட்டிகண்டிகையில்வைத்து இதரகஜ
துரகபதாதிகள் புடைசூழசிறிதுபெண்கள்முன் ஆடிக்
கொண்டுவர அடப்பக்காரன் வெற்றிலைசுருள்மடித்துக்
கொடுத்துவர இப்படியாகவெகு ஆடம்பரலங்காரமாக்
கிவைத்துப் பட்டணத்துப்பெரிய செட்டியாரும் மற்று
முண்டான பேரும் இவனைப் பயணம்பண்ணி ஓகோரா
சாவே தமிழறியும் பெருமாளிடத்திற்குப்போய் வாரு

மென்று அனுப்பிவித்தார்களப்போது விறகுதலையனான இராசாவுந் தமிழறியும் பெருமாளிடத்துக்கு போகிற போது மேளவாத்தியத்தொனி பட்டணமெங்கும் அதிபோகத்தக்கதாக முழங்குவித்தான் அதுகண்டு இதேதோ தெரியாது எப்போதும் போலிருக்கவில்லை இன்றைக்குமேளவாத்தியம் வெகுவாயடிபட்டு வருகிறது இவன் எந்ததேசத்துராசாவோ தெரியாதென்று ஆச்சரியப் பட்டுத் தமிழறியும் பெருமாளுந் தோழிமாரும் உப்பரிகையின்மேலேறிச்சிறிதுநேரம் பார்த்துக்கொண்டிருந்து தாதிகள் மொண்ணச்சிகள் கற்றுச்சொல்லிப் பெண்கள் இவர்களை அழைத்து என்னசொன்னாளென்றால் அந்த இராசா நம்முடைய தலைவாசலிலே வந்திறங்கி விசுவாசங் கொடுத்தால் வாங்கி வாருங்களென்று சொல்லி தானுந்தோழிமாருமாக உப்பரிகை விட்டிறங்கித்தானிருக்கு மிடமேபோய்ச் சேர்ந்தாகள் அதன்பிறகு விறகு தலையனான இராஜாவுஞ் செயசெயவென்று வெகு ஆடம்பரத்துடனே தமிழறியும் பெருமாளுடைய அரண்மனை வாசலிலே வந்திறங்கினான் சிறிதுநேரஞ் சென்றபிற்பாடு தன்னோடுகூட வந்தவர்களையெல்லாம் அனுப்பிவிட்டுத் தானும் அடப்பக்காரனுமாகவிருந்தான் அதுகண்டு மொண்ணச்சிகள் கற்றுச்சொல்லிகள் வந்திராசாவே நீர் எந்தத்தேசமென்றார்கள் அந்த விறகுத

லையனும் நாம் இராசாக்களல்லவே இவர்களுடனேநமக்குநன்றாய்ப் பேசவராதே நாம் பேசினால் மோசம்வரப்போகிறதென்று பேசாமல் மவுனமாயிருந்தானதுகண்டு இதென்னமோ இவன் வாயைத்திறவாமலிருக்கிறானென்று பின்னையு மிவனைப்பார்த்து பழமொழியோவென்றார்கள் அதற்குஞ்சும்மாவிருந்தான் பின்னையும் பின்னையும் ஊமையோ செவிடோவென்றார்கள் அதற்குஞ்சும்மாவிருந்தான்இந்தநான்குவிசேஷத்திற்கும் சும்மாவிருந்தபடியினாலே மொண்ணச்சிக ளெண்ணிக்கொண்டது இவர்பேசாமலிருக்கிறதெல்லாம் தலைமையாயிருக்கிற தமிழறியும்பெருமாளுடனே பேசிக்கொள்வோம், இவர்களுடனே நமக்கென்னபேச்சிருக்கின்றதென்று எண்ணிக்கொண்டிருக்கிறானென்று நிச்சயித்துக்கொண்டார்கள் இவன் பேசவகையறியாமலிருக்கிறது அறியாமல் அவளுடனே பேசிக் கொள்வோ மென்றிருக்கிறானென்று நினைத்து சும்மாயிருந்தார்கள் பின்னையுஞ்சற்றுநேரத்திற்குப்பிறகு இராசாவே நீர் எங்களுடனே பேசாவிட்டாற்றானே போச்சுது இப்போதிங்கே யாருக்கு விசுவாசங்கொண்டு வந்தீரென்றார்களதற்கு விறகுதலையன் வாயைத்திறந்து உங்கள் நாச்சியருக்குக்கொண்டு வந்தேன் அவளுக்குப் பரியமென்னவென்றுகேட்டான் ஆயிரம் பொன்பரியமென்றுசொன்னார்கள் நல்லதென்று தண்டிகையி லிருந்த ஆயிரம்பொன் முடிப்பையெடுத்

துக்கொடுத்தானதை வாங்கிக்கொண்டுவந்துதமிழறியும் பெருமாள் முன்னேவைத்து தாங்கள் அவனை நன்கு வசனங்கேட்டதும் அதற்கொன்றுஞ் சொல்லாமல் மவு னமாயிருந்ததும் பிறகு கேட்டவசனத்திற்குப் பொன் கொடுத்ததுஞ் சொன்னார்கள் அதுகேட்டு இவன் மூட னென்றறிந்து தாசிகளை யழைப்பித்துப் பொன்னை யெடுத்துக் கொண்டுபோய் பணநோட்டம் பார்க்கிற பெண்கையிற்கொடுத்து பார்வையிடுவித்துக் கொண்டு பொன்னைப் பொக்கிஷப்பெட்டியிலடக்கம் பண்ணுவித் துஅந்த இராசாவைத் தெருத் திண்ணையிலிருக்கச் சொல்லி வாருங்களென்று சொல்லி யனிப்பினளப்படி யே தாதிகள் பொன்னைப்பார்வைவிடுவித்து பொக்கிஷ ப்பெட்டியிற் சேர்த்து இராசாவை தெருத்திண்ணையி லிருக்கச்சொல்லிபோனார்கள் சிறிதுநேரஞ்சென்றபிறகு அந்த இராவைக்கூத்துப்பார்க்கிற மண்டபத்திற்கழைத் துவரச் சொல்லியனுப்பினள்.

அப்படியே அழைத்து வருகிறபோது விறகுதலை யனன இராசாவும் இரண்டாங்கட்டைக்கடந்து இப்பா லெவரச்சே அங்கிகேயிருக்கிற சித்திரங்களையும் மொண் ணச்சியையுங்கண்டு மோகித்துத்திகைத்து கண்ணிமை யாமறபடிக்குப் பார்த்திக்சொண்டிருந்தாள் மறுநாள் பொழுது விடிந்தபின்பு அதைவிட்டு அப்பாலேபோகி றபோது அந்தத்தாதிகளோடிவந்து அடாமூடாமோசம்

போனாயேபொழுது விடிந்துபோயிற்றே இனியுனக்கப்புறம்போகச் சொல்லவில்லையென்று கடூரமாகப்பேசிப் பிடரியிலேகுத்திப் பழமுறத்தாலடித்துக் குப்புறத்தள்ளியோட்டி விட்டார்கள் விறகுதலையன் அந்த அடியைப்பட்டுக்கொண்டுபோய்என்கையிலே ஆயிரம்பொன்னை வாங்கிக்கொண்டு சும்மா அடித்து ஓட்டிவிட்டார்களென்று தெருவிலேகூவினான் அதுகேட்டு மொண்ணைச்சிகள் இதென்ன புதுமையாக விருக்கிறது நமக்கிவன் குலாங்கிஷமொன்றுந்தெரியாதே இன்றையவரையிலிப்படிக் கூவிப்புலம்பினபேரில்லை இவனாரோ நாமறியோமென்று அவனைத்திரும்பவும் அழைப்பித்து நீ கூவுகிறதென்னவென்று கேட்டார்கள் அதற்கு விறகுதலையன் சொல்லுவான் என்கையிலே பொன்னைவாங்கிக்கொண்டால் எனக்கு ஒப்புசொல்லி யுடன்படத்தேவையில்லையோசும்மாயடித்து ஓட்டிவிட்டாற் பொருளிழந்தநான் கூவாமலென்ன செய்வேனென்றானதற்கு மொண்ணைச்சிகள் சொன்னது உன்கையிலே பொன்வாங்கிக்கொண்டால் ஒப்புச்சொல்லவேண்டிய துள்ளதுதான் ஆனாலுமென்ன இப்போது நானுனக்கொரு கவிசொல்லுகிறேன்அதற்குப்பயனைச்சொன்னால் அப்படியேயாகிறதென்று அவர்களில் ஒருத்தி ஒருகவிசொன்னாள் அந்தக்கவி கேட்டு அதன்தாற்பறியமொன்றுந் தெரியாமற் பேய்போலவிழித்துக்கொண்டிருந்தான் அதுகண்டு முன்னே

யடித்தது பொய்பொய் இப்போயடிக்கிறது மெய்யென்று பழமுறத்தாலேயும் பழந்தொடப்ப கட்டையாலும் அடித்துக் கழுதையின் மேலேற்றி ஊர்கோலங்காட்டி யோட்டிவிட்டார்கள் அந்த அடியைப்பட்டுக்கொண்ட விறகுதலையனும் பட்டணத்திலேபோய் முன்னாலேதமிழறியும் பெருமாள் கையிலே அடிபட்டுத்தங்கள் தேசத்திற்குப் போகவெட்கப்பட்டுக்கொண்டிருக்கிற அந்தராசாக்களுடனேசொல்லி முறையிட்டான் அதையவர்கள் கேட்டு அப்பா நாங்களு மவிடத்திலிப்படி தான் அவமானப்பட்டு வந்திருக்கிறோம் எங்களுடனே நீயும் சொல்லி முறையிட்டால் ஆகவேண்டியதென்னவிருக்கிறது அவளுக்காயிரம்பொன்னல்ல பதினாயிரம்பொன் கொடுத்தாலும் பலனென்றுமில்லை அவளுடனே கவி சொல்லிப் பிரதியுத்தரங்கொடுத்து அவளை செயித்தாற் காரியமாகும் இங்கே அம்மாத்திரம் கவிப்பிரசங்கம் பண்ணி அவளை செயிக்கத்தக்கின ஆண்பிள்ளைகள் இந்தக்கடல் சூழ்ந்தவுலகத்தி லொருவருமில்லை அவளுக்கொருவருமெதிரில்லை ஆனபடியினால் மதுரையில் பாண்டியராசாவி னிடத்தில் பிரசண்ட வித்துவாம்சராகிய சங்கத்தார் சங்சப்பலகையின்பேரிலே நாற்பத்தொன்பது பேரிருக்கிறார்கள். அவர்களே கல்விக்குரியவர்களிவர்களுக்கு மிஞ்சினவர்களொருவரு மில்லையென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் இங்கேயிவளிப்படிப்பிரபலமாய்ப் பேரிட்டுக் கொண்டிருக்கிறதை யவர்களறி

யார்கள் நீ சமர்த்தனானவர்க ளிடத்திற்குப்போய் உனது மனக்குறையை முறையிட்டுக்கொள்வாயேயாகி லப்போது அவர்கள் வந்து இவளைக்கெர்வபங்கஞ் செய் தாற்செய்யலாமேயல்லது மற்றொருத்தாரால் முடியாது இல்லாவிட்டால் அவளுக்கு இங்கேயாருமெதிரில்லை நீபோகிறதானாற் சீக்கிரமாகப்புறப்பட்டு மதுரைக்குப் போம்பிள்ளாயென்றார்கள் விறகுதலையனும் அந்தவிசே ஷத்தைக்கேட்டு நான் பொன்தேடப்பட்ட அருமை யெனக்கல்லவே தெரியும் அப்படிநான் வருத்தப்பட்டுத் தேடினபொன்னைக் கொடுத்துவிட்டு சும்மாப் போவே னோவென்று வெகுகோபமாய் உடனே புறப்பட்டு மது ரைக்குப்போனான் போனவிடத்திலே சங்கத்தாருக்குப் பாற்குடங்கள் கோண்டுபோனார்கள் விறகுதலையன் ஒரு சுக்குமாந்தடியை யெடுத்துக் கையிலே பிடித்துக்கொண் டுகுறுக்கேபோய் நீங்களாரடா பாற்குடமேதடா ஆருக் குக்கொண்டுபோகிறீர்களடா வென்றுமறித்தான் அத ற்கு இடையர்கள் சங்கத்தாருக்குப் பாற்குடமும் கொ ண்டுபோகிறோ மென்றார்கள் அதுகேட்டு விறகுதலைய னும் சங்கத்தாரேது பாற்குடங்கொண்டு போகிறதே தென்று பாற்குடங்களைத் தகைந்துபோட்டான் அப் போது இடையர் பிரமித்துநின்று இவனாரோதெரியாது சங்கத்தாருக்கு இதுவரையில் பாற்குடம்போதல்தடை பட்டதில்லையே பாண்டியராசா முதாலானபேர்களும்

சங்கத்தாருக்கொருபோதும் எதிர்வார்த்தை சொல்லக் கூடாதே அப்படிக்கொத்த சங்கத்தாரைச் சட்டைபண்ணாமல் அவர்களுக்குப்போகிற பாற்குடத்தைத்தளைந் தானென்று பயந்தவுடனே அதிலொருவன் ஓட்டமாக வோடிப்போய்ச் சங்கத்தாரைக்கண்டு சுவாமியெனக்கு யாதொன்றுந்தெரியாது ஒருவன்வந்து தேவரீருக்கொண்டுவருகிற பாற்குடங்களைத் தடுத்துபோட்டானென்றுசொல்ல சங்கத்தாருமந்தவிசேஷத்தைக்கேட்டு பிரமித்து நமது காரியத்துக்குத் தடையுண்டோவென்றும் அவனெப்படிக் கொத்தவனென்றும் சொல்லிச்சங்கத்தார் இரண்டொருத்தரெழுந்து வெளியிலேவந்து விறகுதலையனைக்கண்டு நீ யாரடா எங்களுக்குவருகிறபாற்குடங்களைத் தடுத்த காரணமென்னடா வென்றார்கள் அதற்கு விறகுதலையன் சொன்னது உங்களுக்குச்சங்கத்தாரென்கிற பேரும் சங்கப்பலகையும் வித்தையாண்மையும்கூட விருக்கிறதோ எவ்வளவுமில்லாத நீங்கள் எனக்கெம்மாத்திரமென்று தடுத்தேனென்றான் அது கேட்டு சங்கத்தாரும் இந்த விசேஷமெதினாலே சொன்னாய் அதனைத்தெரியச்சொல்லவேண்டுமென்றார்கள் அதற்குவிறகுதலையன்சிரித்து பெரியோர்களே திரிசிரபுரத்தின் மேற்றிசையிவிரா நின்ற உரையூர்ப்பட்டணத்தை யாளும் சோழராசன் வீட்டுவெள்ளாட்டிப் பெண்தமிழுக்குடையவள் தானேயல்லாமல் தனக்கொருவரும் நிகரில்லையென்று வேறேயரண்மனைக் கட்டிக்கொண்டு

வெகு ஆடம்பரத்துடனே தன்வாசலிலேடால்கட்டிவை
த்து தமிழறியும் பெருமாளென்று பேரிட்டுக்கொண்டு
எந்தெந்ததேசத்து மண்டலாதிபர்வந்தாலும் அவர்
கள் கையிலேமுந்தி ஆயிரம்பொன் வாங்கிக்கொண்டு
ஒரு கவியைச்சொல்லியதற்குப் பொருள்கேட்டுபின்பு
அந்தகவிப்பொருள்தெரிந்து சொல்லாவிட்டாலவர்களை
அவமரியாதைசெய்து ஓட்டிவிட்டு கன்னிகழியாமற்சுகி
த்து வாழ்ந்திருக்கிருள் இப்படி பேர்பெற்ற ஓர்பெண்
பிள்ளையிருக்க உங்களுக்குங் சங்கத்தாரென்கிறபேரு
மிருக்கத்தக்கதோ சொல்லுங்களையாவென்முன் அது
கேட்டுச் சங்கத்தாரும் இதுமகாநன்றுயிருக்கிறதே நாங்
கள் தமிழுக்குரியவர்களென்றும் எங்களுக்கிவ்வுலகத்தி
லொருபெண்பிள்ளை இப்படிபேரிட்டுக்கொண்டிருக்கிரு
ளென்றல் இதென்ன ஆச்சரியம் அப்பாலெங்களுக்கெ
ன்ன பெருமையிருக்கின்றது ஆயினும் இன்றையவரை
க்கும் ஒருத்தராவது இவ்விதமாக வந்து சொன்னதே
யில்லை எங்களுடன்சொல்லி முறையிட்டதுமில்லை நாங்
கள் கேள்விப்பட்டதுமில்லை இப்போது நீ முறையிட்ட
காரியமென்ன உனக்கேதாகிலும் மனதில் குறையுண்
டோ சொல்லுமென்றுகேட்டார்கள் அதற்குவிறகுதலை
யன் தான்கடையிலேயிருந்ததும் தமிழறியும்பெருமாள்
தன்னைப்பார்த்துக் காறியுமிழ்ந்ததும் அதற்காகவிறகுஞ்
சந்தனக்கட்டைகளும் வீடுகள் தோறுங்கொண்டுவந்து

போட்டதும் பட்டணத்துசெட்டியார் தன்னை இராசவ டிவாக்கி ஆயிரம்பொன்கொடுத்து வெகு ஆடம்பரத்து டனே அனுப்பிவித்ததும் ஆயிரம்பொன்னையும் வாங்கிக் கொண்டு ஒருகவியைச்சொல்லி அடித்துஒட்டிவிட்டது முதலான விர்த்தாந்தங்களைக்கிரமாகச்சொல்லி ஐயாசங் கத்தவர்களே இந்நிமிர்த்தியாத்தமே உங்களிடத்திற்கு வந்து விண்ணப்பம்பண்ணிக்கொண்டேன் சுவாமியென் றான் அதுகேட்டுச் சங்கத்தாரும் இவன்பேச்சை நம் பப்போகாதென்று மனதில் நினைந்து மெய்யோபொய் யோ விபரமாயறியவேண்டுமென்று அந்தவிறகுதலைய னைத் தங்களிடத்திலிருக்க வைத்துக்கொண்டு பின்னை யொரு மூடனையழைத்துஅவன்கையிலேஆயிரம்பொன் முடிப்புகட்டிகொடுத்து ஒருகவியுமெழுதிக்கொடுத்தனு ப்பிய விபரம்.

வெண்பா.

மின்னேரிடையாய் விலைபேசிவாங்குமது
பொன்னுயிரண்டே போதாதே-எந்நாளும்
சற்றென்றிராதே சதுராகவாங்கியது
பொற்றொடிக்கும்போதும் புகழ்

இந்த கவிசொல்லிக்கொடுத்து இதற்கென்ன சொ ல்லியனுப்புகிறளோ பார்த்துக் கொள்ளுவோமென்று மூடனைப்பிரயாணப்படுத்தி உறையூருக்குப்போய்த்தமி ழறியும் பெருமாளைக் கண்டறிந்துவரச் சொல்லியனுப் பினர்கள் அப்படியே யவன் உறையூருக்குப் போய்த்

தமிழறியும்பெருமாள் அரண்மனைவாசலிலே நின்றான் அப்போது மொண்ணச்சிகள் கண்டு எங்கே யிருந்துவந் தாயென்றுகேட்க மதுரையிலிருந்து சங்கத்தாரனுப்பி விக்கவந்தேனென்றான் என்னகொண்டுவந்தாயென்றார் கள் ஆயிரம்பொன்னும் ஒருகவியுகொண்டுவந்தேனென் றான் அந்தப்பொன்னையுங்கவியையும் வாங்கிக்கொண்டு போய்த்தமிழறியும் பெருமாள்முன்புவைத்து ஆரோ வொருவன் மதுரையிலே சங்கத்தார்கொடுத்தனுப்பின தாகக்கொண்டுவந்து கொடுத்தானென்று சொன்னார்கள் அதுகேட்டுத் தமிழறியும்பெருமாளும் நல்லதென்று அந்தக்கவியைப்பார்த்து வாசித்துக்கொண்டு இந்தக்கவி யிலே தன்னைச்சபித்து எழுதியனுப்பினார்க ளென்று வெகு கோபத்துடனே அந்தக்கவிக்கு மறுகவியெழுதி னவிபரம்.

வெண்பா.

ஆடபருத்திதருமாகி லங்கொருத்தி
கோடிபருத்திகொண்டென்-செய்வாள்மூடர்
கவித்திரமையிரண்டாகற் றூற்கொண்டு
கவிப்பிரேசங்கத்தவர்கள்.

என்று இந்தக்கவியுமெழுதி அந்தமூடனிடத்திற் கொடுத்து பொன்னையுங்கொடுத்தனுப்பினாள் அவன் மதுரைக்குப்போய்ச் சங்கத்தாரைக்கண்டு பொன்னையு ம்கவியையும் அவர்கள்முன்னே வைத்தான் சங்கத்தா

ரும் அந்தக்கவியைப்பார்த்து ஆ ஆ வெள்ளாட்டிதனை ச்சொல்லிக் கொள்வது விட்டு நம்மையெல்லாரையும் மூடரென்று கவியெழுதியனுப்பினாள் அவளண்டைக்கு ப்போய் கவிப்பிரசங்கம் செய்து தோற்கச்செய்து அவ ளரண்மனையையு மிடிப்பித்துத் தமிழறியும்பெருமாளெ ன்கிற பெயரையுமாற்றிப் போட்டுவரவேண்டுமென்று வெகுகோபத்துடனே சங்கத்தார் நாற்பத்தொன்பது பேருமெழுந்திருந்தார்கள் அப்பொழுதுநற்கீரர் ஒருவச னஞ்சொல்லுகிறார் வாருங்கள்சங்கத்தாரே நாமெல்லோ ரும் போய்ப்பிரசங்கம்செய்து வென்றுவருகிறது நன் மையல்லபார்த்தபேருக்குநன்றாயிராதுஒருபெண்பிள்ளை நிமித்தியார்த்த நாற்பத்தொன்பதுபேரும் போய்வென் வந்தார்களாவென்றால் நகைப்புக்கிடமாகுது எவ்வள ஈனத்துவமதனால் நமக்குயாதொருபிரயோசனமுமில்லை நீங்களெல்லோரும் இவ்விடத்திற்றானே யிருங்கள் நா னொருவனுமேபோய் அவளுடனே பிரதிவாதித்து அவ ளைதோற்கச்செய்து தமிழறியும்பெருமாளென்கிற பெய ரைமாற்றுவித்து இந்தவிறகுதலையனுக்குத்தானே அவ ளைக்கலியாணம்செய்துவைத்துவருகிறேனென்றார் அதி லேசிறிதுபேர் தமிழறிவா ளென்கிற பேர்பெற்றிருக் கிறதும் அவள் ஔவையார் வரப்பிரசாதத்தினால் ஆரா லேயுஞ் செயிக்கக்கூடாமலிருக்கிறவளென்று நாம்காற் றுவிசேஷமாய்க் கேள்விப் பட்டிருப்போம் ஆனாலது

ஏதோ யெவ்விடமோயென்னமோ யாதொன்றுமறியோமே யென்று அசட்டைசெய்திருந்தோம் அது இப்போதுமெய்யாக விளைந்திருக்கிறது அப்படியவள் ஔவையார்கையிலே வரம்பெற்று ஆராலேயுமழிக்கப்படாமல் இருக்கிறவளை நற்கீரரே நீர்போய் எப்படிசெயித்துவருவீரெனக்கேட்டார்கள் அதற்கு நற்கீரர் உடனே நான் போய் அவளைசெயித்து வராமற் போவேனே யாகில் இன்னபடியென்று பிரதிக்கினை செய்துகொண்டவிபரம்.

வெண்பா.

சென்றுறையூர்பிக்கிச் சேயிழையையான்கண்டு
வென்றுதமிழ்த்து மீளேனேல்மண்ணில்
விருதிருக்கவுண்ட வெறுவலியோடொப்பேன்
வருந்துவரோ சங்கத்தார்.

என்றுசொல்லக்கேட்டுச் சங்கத்தார் அனைவருஞ் செவிகளைப் புதைத்துக்கொண்டு சிவசிவாவென்று சொல்லிப்பின் நல்லது அப்படியே போய்வாருமென்றுஅனுப்பினார்கள் அப்போது நற்கீரரும் விறகுதலையனையழைத்துக்கொண்டு மதுரையைவிட்டுப் புறப்பட்டு உறையூருக்கு வருகிறபோது நடுவேகாடாந்த காரமாயிருந்து அந்த காட்குள் வழியாகவரச்சே ஒருவடதாரி மரத்தின்மேலே வள்ளிக்கொடி படர்ந்திருந்தது அதையொரு வேடன்கண்டு மேலேயிருக்கிற சிக்குச் சிறகெல்லாம் அறுத்துப்போட்டுக் கெட்டப்பாறையினலே வள்ளிக் கிழங்கைப் பெயர்த்துக் கொண்டிருந்தான் அதைநற்கீர

ர்கண்டு ஒருகவியாகப்பிணைத்துக்கொண்டு அவளுடனே தர்க்கம்பண்ணித் தீராதவிதத்திற்கு இவனையவளுக்குத் தெரியாமற்கண்ட சுத்திபாடித் தோற்கச்செய்வோமெ ன்றுமனதிலெண்ணிக்கொண்டு அப்பாலேபோகிறபோ து விறகுதலையனையழைத்துவாரும்பிள்ளாய் தம்பி அவ ளிருக்குமரண்மனையின் கட்டுக்காவலென்ன அங்கேயெ ன்னென்ன அதிசயங்களிருக்கிறதோ அவைகளையெல் லாம் விபரமாயெனக்குத் தெரியச்சொல்லுமென்றுகேட் டார். அதற்குவிறகுதலையன் சொல்லுவான் ஐயா அவ ளிருக்கிற அரண்மனைக்கு ஏழுமதிலும் அறுபத்துநான் குவாசலும் வாசலுக்குவாசல் மெண்ணச்சிகள் கற்றுச் சொல்லியதுகள் எக்கடத்திகள் சூஸ்திரப்பதுமைகள் யானைகள் புலிகள் கரடிகள் குரங்குகள் வேட்டைநாய் கள் கிணறு, குங்குமச்சேறு சித்திரமண்டபம், கச்சேரி மண்டபத்திற்களிற்றியானைத்தந்தங்கட்டிலும் பெண்யா னைத் தந்தங்கட்டிலும் போட்டிருக்குதாம் பின்னையுமெ ன்னென்ன மேரவிருக்கிறதென்றுஞ் சொல்லுவார்கள் எனக்கு ச்சொல்லத்தெரியாது எனக்குத்தெரிந்தமட் டும் அங்கேயிப்படிக்கொத்த விநோதங்களெல்லா மிருக் கின்றன ஐயாவென்றான் அதுகேட்டுநற்கீரர் இன்ன மும் விநோதங்களனேகமிருக்கலாமென்று நினைத்துக் கொண்டு விறகுதலையனையழைத்து எண்ணச்சீலை மூங் கிற்கனிசெம்பருத்திப் பூமல்லிகைப்பூ காந்தக்கல் கட்

டெறும்பு அலவன்வாழைத் தண்டு கரும்புக்காணை எலுமிச்சம்பழம் இவைகளையெல்லாஞ் சேகரித்துக் கொண்டுவாவென்று அனுப்பினார். அப்படியேபோய் அவைகளனைத்துஞ் சேகரித்துக் கொண்டு வந்தான் அதன் பிறகிருவரும் புறப்பட்டுத் திரிச்சிராப் பள்ளிக்குவந்து மேற்குமுகமாகத் திரும்பிப் பார்த்தார்கள் உறையூர்ப்பட்டணத்திலே தமிழறியும் பெருமாளிருக்கிற உப்பரிகையின்மீதிலே செய்துவைத்திருக்கப்பட்ட பொற்குடந்தோன்றிற்று அதைக்கண்டு நற்கீரரும் விறகுதலையனையழைத்து அதோ பொற்குடந்தெரிகிறதே அது எந்த வூர் எந்தகோபுரமென்றுகேட்டார் அது இந்தவெள்ளாட்டி அரண்மனைக்குள்ளேயிருக்கிற உப்பரிகையின்பேரிலமைத்த பொற்குடமையாவென்றான் அது கேட்டு நற்கீரரும் பிறகு தம்முடையமனதிற் பிரதிக்கினை செய்துகொண்ட.

வெண்பா.

இதுவோசிராப்பள்ளியிதுவோவுறையூர்
இதுவோதமிழறிவாளெல்லை யிதுவோ
இறைவளர்க்குஞ்சங்கமிவளழிப்பதென்ன
குறைவறத்தான்வெல்வேன்குறித்து.

என்றுபிரதிக்கினை செய்துக்கொண்டுஅப்பால்உறையூர்ப் பட்டணத்திற் போய்ச்சேர்ந்தாள் அப்போது சாயங்காலவேளையாச்சுது அதன்பிறகு நற்கீரதேவரும்

விறகுதலையனை யோரிடத்திலே வைத்துத் தமதுபச்சை வடந்தோவத்தி பாகை, கடுக்கன், மோதிரம், மற்றுமுள்ள ஆபரணங்களையெல்லாம் விறகுதலையன் வசஞ்செய்து அவனை யவ்விடத்திற்றானேயிருக்கச்சொல்லியவன் கட்டியிருந்த கரித்துணியை வாங்கித்தலையிலும் அரையிலும் கட்டிக்கொண்டு இரண்டு கொடியைப்பிடுங்கி இடுப்பிலேசுற்றிக் கொண்டு அதிலேயொரு அரிவாளையுஞ் சொரிகிக்கொண்டு இவ்விதமாக விறகுதலையனைப்போல வேஷம்பூண்டு அந்த மாற்றெல்லாம்படியிலே யடக்கமாய் வைத்து வாழத்தண்டைச் சுமையாகக்கட்டித்தலைமேலே வைத்துக்கொண்டு தமிழறியும் பெருமாளிருக்கிற அரண்மனையை நோக்கி வருகிறபோது சூரியனஸ்தமிக்கிற சமயமாச்சுது அந்தவேளையிலே நற்கீரதேவரும் வாழைத்தண்டை விறகாகக்கட்டிக் கொண்டு கமுகச்சாலையிற்போய் முதற்கட்டுவாசலிலே கற்றுச்சொல்லிப்பெண்க ளிருக்கிறதைக்கண்டு பிறகு விலைகூறினர்.

வெண்பா.

வெய்யோன்கதிரெரிப்பவேற்கண்ணுள் பின்றொட
பையவருதென்றற்பயனறியேன்—துய்ய [ரப்
மலர்த்தடங்கண்வாய்ந்தமயிலனையீர் கொள்ளீர்
விலைக்குவிறகோவிறகு.

என்றுகூறின சேதியைக் கற்றுச்சொல்லிப் பெண்

கள்கேட்டு இதுவரையில் நம்முடைய நாச்சியாருக்கு எதிராளி யொருவன் வந்து கவிசொன்னதுமில்லை அந்தக்கவியைக் கற்றுக்கொண்டு போய்நாம் அவளுக்குச் சொன்னதுமில்லையே எவன்வந்தாலும் அவனுக்கு நம்முடைய நாச்சியார் கவிச்சொல்லிப் பொருளறியாத போதடித்து ஓட்டிவிடுகிறவழக்கமல்லவோ இது ஏதோ தெரியாது ஆச்சரியமாயிருக்கின்றதென் றுநினைத்து இந்தக்கவியைக்கற்றுக்கொண்டு போய்த்தமிழறியும் பெருமாளுடனே யாதோ ஒருவன் வாழைத்தண்டைக் கட்டித்தலைமேலே வைத்துக்கொண்டு விறகென் றுவிலைகூறிக்கொண்டு இந்தக்கவியைச்சொன்னனென்று சொன்னார்கள் அதுகேட்டு தமிழறியும்பெருமாள் மறுகவிசொல்லியனுப்பின.

வெண்பா.

உள்ளீரம்பச்சை புகையுமெரியாது
கொள்ளீர்விறகென்று கூறினீர்மெள்ள
வீணரரேபோம்போம் வீணரோநீருந்
தாதரோசங்கத் தவர்.

என்றுசொல்லி இந்தக்கவியைக் கற்றுச்சொல்லிப் பெண்கள் கற்றுக்கொண்டுபோய் விறகுதலையனுக்குச் சொன்னார்கள் அதைக்கேட்டு விறகுதலையனை நக்கீரர் இரண்டாங் கட்டுக்குள் போய்ச்சொன்ன வெண்பா-சாலவுலர்ந் துண்டு சாகலத்தினுற் புகைபோம், நீலவிழி

மாதர்க்கு நின்றெரியுங் கோலக்கலைக்கு விலையல்குறக் னங்குழலீர் கொள்ளீர், விலைக்குவிறகோவிறகு.

இந்தகவிபைக் கற்றுக்கொண்டுபோய்த் தமிழறியும் பெருமாளுடனே சொன்னார்கள் அதைக்கேட்டு அவள் இவனைக்கொண்டாடிக்கொண்டு இவன் நல்லவித்துவானுமாய் நல்ல இலட்சண மறிந்தவனு மாயிருக்கிறான் கவிவெகுநேர்த்தியாயிருக்கின்றது இதைநாமிரட்டிக்கப்போகாது இன்றுவரைக்குங் கன்னிகழியாமற் றேடியுண்டு கீர்த்தி யடைந்திருந்தோம் இப்போதிவனென்னகாரணமாய் வந்தானோ தெரியாது இவனம்மைச் சோதிக்கவந்தவனாகக் காணப்படுகிறது ஆனாலென்ன இவனுடைய சமர்த்தைப் பார்ப்போம் இந்தக்கட்டுகள் எல்லாம் நடக்கச்சே இடைநடுவில் மோசம்போகாமல் வந்து நம்முடனே கவிப்பிரசங்கம்பண்ண நம்மிலும் வல்லவனாகவிருந்தாலப்படிக் கொத்தவனைகூடினால் தானென்ன தோஷமில்லை யென்றெண்ணிக்கொண்டு மறுமொழியனுப்பினதாவது.

வெண்பா.

பால்பாயதொட்டிப்பசுமையுலர்ந்ததோ
கால்பட்டுவீழ்ந்துதைத்து கட்டினையோ-சாலப்
புகையுமோவுண்மைபுகழ்ந் துரையாய் நீயும்
வகையாகவாசலிலே வந்து.

••

இக்தக்கவியைக் கொண்டுபோய் விறகுதலையனுக்குச்சொல்ல அவ்விறகுதலையன் மூன்றுங்கட்டுக்குள்ளே போய்ச் சொன்னதாவது.

வெண்பா.

ஈரமுலர்ந்தே யெலும்புபோலேகாய்ந்து
சாலவெரியுமிதுதையலேமாலை, யிரவுவருமுன்னே
யிகழாமலிந்த, விறகுதனைக்கொள்க விரைந்து

இந்தக்கவியைக் கற்றுக்கொண்டுபோய்த் தமிழறியும் பெருமாளுடனேசொல்ல அப்போ தந்தத்தமிழறியும் பெருமாள்சொன்ன.

வெண்பா.

விறகோவிறகென்று மேன்மேலுங்கூறும்
விறகுவிற்பான்றன்னருகின் மேவி-விறகு
விலைகேட்டுவாருமென்று மெல்லியளால்கேட்டாள்
கலைவாய் மிழறிவாள் காண்

இந்தக்கவியைக் கற்றுக்கொண்டு போய்விறகுதலையனுக்குச்சொல்ல அதுகேட்டு விறகுதலையனனநற்கீரர் நான்காம்வாசல்கடந்து ஐந்தாம்வாசலிலே சொன்னதாவது.

வெண்பா-கட்டுவிறகுவிலை கன்னியரேகூறக்கேள்
வெட்டுவிறகுதனை வீரனரிட்ட
நறைவார்குழன்மடவீர் நான்கொண்டுவந்த
விறகாயிரம்பொன் விலை.

என்றுசொல்லிக்கொண்டு ஐந்தாம் வாசல்கடந்து ஆறும்வாசலுக்குவர இந்தக்கவியைக்கற்றுச் சொல்லி கற்றுக்கொண்டுபோய்ப் தமிறிறியும் பெருமாளுக்குச் சொல்ல இவன்நல்ல வித்துவானேயென்று பின்னையுஞ் சொன்ன.

வெண்பா-பச்சைமுழுதுமெரியாதுபாரிடத்தில்
இச்சையிதுவன்றேவியம்பக்கேள்-நிச்சயமாய்
உள்ளவிலைசொல்லுகெனவோதந்தெரிந்துவந்து
கிள்ளைகாள்சொல்லீர் கிளர்ந்து.

இந்தக்கவியைக்கற்றுச் சொல்லிகள் விறகுதலைய னுக்குச்சொல்ல விறகுதலையனு மேழாம்வாசலில் வந்து சொல்ல.

வெண்பா-ஐந்நூற்றிரட்டிப் பொன்னப்புறமுஞ் சோறு கறி, யென்னூர்விறகு விலையிப்படியே-முன்னே நான் சொன்னபடியே யொழியச்சொல்லறியாப் பேதைகாள் சின்னூலிடையாட்குச் செப்பு.

இந்தக் கவியைக்கற்றுச் சொல்லிகள் போய்தமி ழறியும் பெருமாளுக்குச்சொல்ல அதுகேட்டுத் தமி ழறியும்பெருமாளும் விசாரப்பட்டுவருகிற தெல்லாம் வரட்டும் பார்ப்போமென்று கற்றுச்சொல்லிகள் கை யிலே ஆயிரம்பொன்னும் நாழி அரிசியும், மிளகுமிள காய், காய்கறி, முதலானவைகளைக்கொடுத்து இவை களை அந்த விறகுதலையன் கையிலே கொடுத்தவன் போடுகிற விறகைப்போட்டுவித்துக்கொண்டு அவனை

யனுப்பிவிடுங்களென்று சொல்ல அப்படியே கற்றுச் சொல்லிப் பெண்கள்வந்து அந்த ஆயிரம் பொன்னை யும் அரிசிமுதலானவைகளையுங் கொடுத்து விறகுபோ டென்றூர்களவ்வாறேயவைகளை வாங்கிக்கொண்டு அ வாசொன்னபடியே எட்டாம் வாசலிலே போட்டு அங் கேயிருந்துகொண்டு கற்றுச்சொல்லிப் பெண்களையழை த்து மறுபடியுமந்தப்பொன்னையும் அரிசி முதலானவை களையுங் கொடுத்து இந்தப் பொன்னையுங்கள் நாச்சியா ருக்கு இராத்திரிக்குப் பரியமாக வைத்துக்கொள்ளச் சொல்லும் இந்த அரிசியைச் சமைத்து நமக்கு ராத்திரி க்குச் சாப்பாடு பண்ணிவைக்கச் சொல்லென்றதற் கொரு கவியுஞ்சொல்லி அனுப்பி வைத்ததாவது,

வெண்பா.

தந்தபொன்னுமுங்கள் தமிழறிவாட்கேபணையம்
இந்தவரிசிக்கிடு வசனம்—முந்துமொழி
பாகனையசொல்லீர் பகருமிந்தப்பாவையபற்குப்
போகென்றூற் கூடாதுபோ.

என்று பாடித்தாவுடனே கற்றுச்சொல்லிப் பெண் கள் தமிழறிவாளிடத்திற்போய் பொன்னையும் அரிசி முதலான சாமக்கிரயங்களைவைத்து அந்தக்கவியையுஞ் சொன்னூர்களதுகேட்டு அவாளிதுவென்னகாரணமோ புதுமையா யிருக்கிறதென்று விசாரப்பட்டுச் சற்றுத்

தெளிந்து பின்னையும் கற்றுச்சொல்வாளடி பெண்களே நீங்கள் பொன்னைக்கொண்டுபோய் நமதரண்மனைப் பொக்கிஷத்தில் சேர்த்துவிட்டு அந்த அரிசியைத் தொம்பரத்திற் போட்டுச் சமையற் செய்யுங்க ளந்தவிறகுதலையனை நமதரண்மனைப்புற வறைத்திண்ணையி லிருக்கச் சொல்லுங்க ளதற்கவனென்ன சொல்லுகிறானே அதை நீங்களொன்று மறியாதவர்கள்போலக் குறுக்குநெடுக்குமாகத் திரிந்து கேட்டுக்கொண்டு அதிசீக்கிரத்தில் வாருங்களென்று சொல்லியனுப்பினாள் அப்படியே அவர்கள் பொன்னைப் பொக்கிஷத்திலே சேர்த்துப்போட்டு அரிசியைத் தொம்பரத்திலிட்டுச் சமைக்கவேலைக்காரர்களுக்கு உத்தரவுசெய்து விட்டு விறகுதலையனிடத்திற் கதிக துரிதமாய்வந்து ஆரையாநீ இந்தப்புறவறைத்திண்ணையிலுட்கார்ந்திரு மெனச்சொல்லித் தாங்களிவனென்ன சொல்லுகிறானோ யதையறிவோமென்று யாதொன்றுமறியாதவர்கள்போல குறுக்குநெடுக்கு முலாவித் திரிந்துகொண்டிருந்தார்க ளப்போது விறகுதலையனான நற்கீறதேவரும் தாதிகளுத்தரவின்படிக்குத் திண்ணை மீதிருக்கக்சே யந்தத்திண்ணைக்கெதிராக ஒரு புளியமரமும் பனைமரமும் ஓரிடத்தில் வளர்ந்து இரண்டுமொன்றாய்ப் பிணைந்துக்கொண்டிருந்தது அது தருணஞ் சாயங்காலமானபடியினாலே அந்தமரத்தின் மீதொரு கொக்கு வந்திறங்கி யிருந்தது அந்தக்கொக்கை நற்கீரர்பார்த்து சொன்னதாவது.

விருத்தம்.

புழியிலரும்பனையிற் பொன்றலைக்கொக்கேகே
ளிளமைமொழியா திருந்தீர்தளருவதேன்
எம்மைப்பிரித்தவரோ யெம்மிலுந்தாரியரோ
உம்மைப்புரித்தா-ருரை.

என்று சொல்ல இந்தக்கவியைக் கற்றுச்சொல்லி கள்போய்த் தமிழறிவாளுக்குச்சொல்ல அதுகேட்டுத் தமிழறிவாளும் விறகுதலையனுன நற்கீரரை யந்தக் கட்டைக்கடந்து ஒன்பதாவதுகட்டுக்குளழைத்து வரச்சொல்ல அப்படியே அவர்களழைத்து வந்து விட்டார்களந் தக்கட்டுக்குள்ளிருந்து விறகுதலையனுன நற்கீரர் சொன்னதாவது.

விருத்தம்.

ஊசிமுனையிலொளிமுத்துக்கோத்ததுபோல்
வீசும்பனிவந்து மெய்குளிர—மூச்சு
மூலைத்தடங்கண்மாதே முழுவினையேறகின்று
நிலைகடையோ நிச்சயித்தாய்நீ.

என்று சொல்லக்கேட்ட கற்றுச்சொல்லிப் பெண்கள் சிவுக்கென்றுபோய்த் தங்களெசமானியாகிய தமிழறிவாளுக்குச்சொல்ல அவள்கேட்டு ஓ பெண்களே அந்த விறகுதலையனை இப்பாலழைத்துவந்து வைக்கோற்படுக்கைப்போட்டுக் கொடுங்களென்று சொன்னுள் அவர்களப்படியே பத்தாவது கட்டுக்குள்ளே யழைத்து வந்து வைக்கோற்படுக்கை கொடுக்க அந்த வைக்கோ

வின்பேரிலேயொரு கந்தையைப்போட்டு படுத்துக்கொண்டு விறகுதலையனான நற்கீரர் சொன்னதாவது.

வெண்பா.

வைக்கோற்சயனத்தில் வாரிமுன்றானையின்மேல்
மெய்த்தோல்வருந்திக்கிடவுடம்பே—மொக்கு
மதுவொழுகும்பூங்கொன்றை வார்சடையோனிற்றைக்
கிதுவோவிதித்த தெமக்கு.

என்று சொன்னகவியை கற்றுச்சொல்லிகள் கொண்டுபோய்ப் பெண்கள் சிகாமணியாய் விளங்கும் தமது முத்தமிழறிவாளுக்குச்சொல்ல அவளதுகேட்டு எனது அருமைத்தோழிகளே நீங்களவனை இப்பாலழைத்துவந்து சீலைப்பாயும் வைக்கோற்றலையணையும் சேகரித்துக் கொடுங்களென்றாள் உடனே கற்றுச் சொல்லிகளப்படியே போட்டுக்கொடுத்தார்கள் விறகுதலையனான நற்கீரர் பதினோராவது கட்டுக்குள்ளேவந்து அந்தப்பாயின்மேற் சயனித்துக்கொண்டு சொன்னதாவது.

வெண்பா.

சரசரத்தபாயுந் தலையணைவைக்கோலும்
பரபரத்தமைச்சினிமார் பண்பும்—விறகுடனே
யீங்கிவர்கள்செய்யு மியல்புமிவர்நலமும்
நீங்காதென்னெஞ்சத்து னின்று.

என்றுசொன்ன கவியைக்கற்றுச் சொல்லிகள்போய்மின்னற்கொடிபோன்ற இடையையும் பொற்கிண்ணம் போன்ற தனபாரங்களையும் விசேஷகல்வித்திறமையு

முடைய தங்கள் தலைவியாகிய தமிழறிவாளுக்குச் சொல்ல அதுகேட்டு அந்த விறகுதலையனைப் பன்னிரண்டாவது கட்டுக்குள்ளே யழைத்து வந்தொரு ஈச்சம்பாயும் தலையணையும் போட்டுக்கொடுங்களென்று சொன்னாள் அச்சொல்லைக்கற்றுச் சொல்லிகள் சிரமேற்கொண்டு அந்த விறகுதலையனையழைத்துக் கொடுத்தார்கள் அப்பால் தன்பேரிலே விறகுதலையனான நற்கீரர்இருந்துகொண்டு சொன்னதாவது.

வெண்பா.

குடவன்கடிக்கக் குளிர்வாடைவீசக்
கிடவென்றிடத்தேகிடந்தே—மடநல்லார்
மென்றகுறங்கைக் கைத்தீண்டவிதியில்லையாதலினு
லென்குறங்கை யான்றழுவினேன்.

என்றுசொன்ன கவியை கற்றுச்சொல்லிகள் போய்த்தமது அரசாகிய தமிழறிவாளுக்குச்சொல்ல இவன் நல்லவித்துவானே அற்பமானவனல்ல வென்றுஎண்ணிக்கொண்டு பதின்மூன்றாவது கட்டுக்குள் அழைத்துக்கொண்டுபோயொரு நார்க்கட்டிலும் ஈச்சம்பாயுந்தலையணையும் போட்டுக்கொடுத்து நம்மிடத்திலே சேவிக்கின்ற பெண்களிலே அதிகஅழகுடனே ஆடும்பெருமாளைச் சிங்காரித்து அவனிடத்துக்கனுப்புங்க ளென்றாள் அப்படியே கட்டிலும் பாயும்போட்டுக்கொடுத்து அதன்பேரிலே விறகுதலையனை யிருக்கச்சொல்லி அந்த அழகுடனும் பெருமாளையுஞ் சிங்காரித்தனுப்புவித்தார்கள் அ

வள் வந்தெதிரே நிற்க அவளைப்பார்த்து விறகுதலைய னான நற்கீரர் சொன்னதாவது.

வெண்பா.

தறிபோலுங்குண்டத்தாள் தானவளைப்போலே
நெறியாகவந்தென்மு னின்றாய்—சிறுபுலிதான்
தீரப்பசித்தாலுந்தின்னுப்புற்றின்னுமோ
நேராகநில்லாதேநீ.

என்று சொன்னகவியைக்கேட்டு அவள் தலையை யிறங்கிக்கொண்டுபோய்த் தமிழறிவாளுடனே சொல் லிக்கொண்டாள் அதுகேட்டுத்தமிழறிவாளும்பதினலா வது சட்டுக்குள்ளே யழைத்துக்கொண்டு போய் ஒருகச் சுக்கட்டிலும் ஈச்சப்பாயும் போட்டுக்கொடுத்து நம்மு டைய தாதிகளிலே இரதமோகினியைச் சிங்காரித்து அ னுப்புங்களென்று சொன்னாள் அப்படியே கட்டிலும் போட்டுக்கொடுத்து அந்தபெண்ணையுஞ் சிங்காரித்து அ னுப்பிவித்தார்களவள் வருகிறபோது விறகுதலையனிட த்தி லெரிதொண்டிருந்த விளக்கிருண்டெரிந்தது அது கண்டிவள் போயந்த விளக்கைக்கையாலே தூண்டி யெ ண்ணையைத் தலையிலே தடவிக்கொண்டாளதை விறகு தலையனான நற்கீரதேவர்கண்டு இவள் இந்தவீட்டு வெள் ளாட்டியென்றறிந்து அவளைப்பார்த்துசொன்னதாவது.

வெண்பா.

சுள்ளிவிறகுசுமைத்தலையனானுலுந்
தெள்ளுதமிழறிவாட்சேராம—வுள்ளுஞ்

செழுபாகினுமினிய தேன்சொலாய்கூடேன்
தொழும்பாமுன்னுச்சியுடன்சொல்.

என்றுசொன்ன கவியைக்கேட்டு அவளும்வெட்கித்தலையை யிரங்கிக்கொண்டுபோய்த்தமிழறிவாளுடனே சொல்லிக்கஸ்திப்பட்டாள் அதுகேட்டுப்பதினேந்தாவது கட்டுக்குள்ளே யழைத்துக்கொண்டுபோய்க் கட்டில்தூங்குமஞ்சத்தின்பேரில் மெத்தை தலையணையும் சீனிப்பாயும்போட்டுக்கொடுத்து நம்முடையதோழிப் பெண்களிலே மதனசேனைக்குத் தன்னுடைய வெண்சாமரையும் பொற்காளாஞ்சியும் பொன்னின்மிதியடியும் பொற்பட்டாடையும் கொடுத்துச்சிங்காரித்து விறகுதலையனிடத்துக்கு அனுப்புவிக்கச் சொன்னு ளந்தப்படியே தூங்குமஞ்சனம் போட்டுக்கொடுத்து அந்தப்பெண்ணைச் சிங்காரித்து அனுப்பிவித்தார்களவள்வந்து நின்றபோது அவளைப்பார்த்து விறகுதலையனுன நற்கீரர் சொன்னதாவது.

வெண்பா.

ஆடையுடையுமவள்கான்மிதியடியு
மூடியுவளாகவந்தென்முன்னின்ருய் மாடுபோற்
குண்டனைநான்சேர்வேனே கோதையர்கள்செய்திதனை
கண்டேன் கண்டேனுங்கணக்கு.

என்றுசொன்ன கவியைக்கேட்டுத் தமிழறிவாளுடனேசொல்லி மிகவும் துக்கித்துக்கொண்டாளவள் துக்கத்தைமாற்றி யிவன்வந்தகாரணமேதோ வென்றுவிசாரமிட்டுக் கற்றுச்சொல்லிப் பெண்களால் மொண்ணச்சி

களை யழைத்து அந்தவிறகுதலையனைப் பதினாறுவதிகட்டுக்குளழைத்துக்கொண்டுபோய் தொம்பரத்திலேசமைத்திருந்தால் சாப்பாடிடுங்களென்று சொல்ல அப்படியேகல்லால் இலையைத்தைத்துப்போட்டு வெந்ததும் வேகாததும் கல்லும்நெல்லுமாய்ச் சாப்பாடுகொண்டு வந்து வைத்தார்களந்தச்சாப்பாட்டைப் பார்த்து இவர்கள் வீட்டிலே சாப்பிடாதவரானபடியினாலும் சாப்பாடிருக்கிறதிட்டமும் பார்த்துச் சாப்பிடுகிற பாவனையாகச்சாதத்தின்மேற் மையைவைத்துக்கொண்டு விறகுதலையனை நற்கீரர்சொன்ன கலித்துறை.

நெல்லான் மருமணலுண்மையானெய்த நீண்டகன்ற, கல்லாற்குரிஞ்சிமகரின்வெம்பாலை கலைபின்முல்லை, வில்லாம்புருவத்து வேனெடுங்கண்ணிநன்மெல்லி நல்லாய், சொல்லாநிலமஞ்சுங்காட்டுவ நீயிட்டசோறிடத்தே.

என்றுசொல்லி இதற்குப்பொருள் சொன்ன

கல்லொன்றுநெல்லிரண்டுகொணுமணன்முன்றரிசி
கல்லையுடஞ்சுவகைகாட்டினேன்—வின்னுதலாய்
முல்லைநகையாட்குமொழி.

என்று இரண்டுகவியுஞ் சொல்லக்காட்டி அசனத்தையுந்தள்ளிப்போட்டு அப்பாலேயிருந்தார். அதுகேட்டு கற்றுச்சொல்லிகள்போய்த் தமிழறிவாளுக்குச்சொன்னார்கள் தமிழறிவாளும் நல்லதென்று அந்த விறகுதலையனைக் கச்சேரிமண்டபத்துக்கு வரச்சொல்லியழை

புங்களென்ன படிபடியே கற்றுச்சொல்லிகள்ளக்களிடத் வந்து விறகுதலேயனைக் கச்சேரிமண்டபத்துக்கு வாரு மென் றழைத்தார்கள் நல்லதென்று விறகுதலேயனை நற்கீரதேவர் கச்சேரிமண்டபத்துக்கு வருகிறபோது ப தினேழாங்கட்டுக்குள்ளே சூஸ்திரப் பதுமைகளிவரை ஆகடியம்பண்ணும்பொருட்டு எதிரேவந்ததுகண்டு தெ ண்டாலேயடித்தார் அந்தச் சூஸ்திரப் பதுமைகள் யெல் லாம் கலேந்து விழுந்துபோச்சுது அதுகடந்துஅப்பாலே பதினெட்டாம்வாசலிலே போகிறபோது இரண்டு பக் கத்திலும் புலிகள்சீறிவந்தன அந்தப்புலிகள்முன்னே செம்பருத்திப் பூவைப்போட்டார் அவைகளை மாமிச மென் றெடுத்துக்கொண்டு அப்பாலேபோயின அதுகட ந்து அப்பால் பத்தொன்பதாம்வாசலில் போகிறபோது இரண்டு பக்கங்களிலுங் கரடிகள் சீறிவந்தன அப்போது காந்தகற்றாணிலே கட்டினர் அதிலே நெருப்புப்பறந் தது அதுகண்டு பயந்து அப்புறமோடிப்போயின அது கடந்தப்பாலே இருபதாம் வாசலிற் போகிற போது இரண்டுபக்கமும் யானைகள்கொர்ச்சித்து தும்பிக் கையைநீட்டிக்கொண் டெதிரேவந்தன. அவைகள் கை யிலே கரும்புக்கரணையைக்கொடுத்தார். அதை வாங் கிக்கொண்டு அப்பாலேபோயின இருபத்தோராம் வாச லிலேபோயின குறங்கு சீறிவந்தது அதன்முன்னே கட்

டெறும்பையும் நண்டையும்விட்டார் அதுகண்டுபயந்து அப்போதே ஓடிப்போச்சுது அந்தவாசற்கடந்து இருபத்திரண்டாம் வாசலிற் போகிறபோது வேட்டைநாய் சீறிவந்தது அதன்முன்பு மல்லிகைப்பூவைப்போட்டார் அதுசோறென்று முகந்து கொண்டிருந்தது அதுகடந்து இருபத்து மூன்றும்வாசலிற் போகிறபோது அந்த வாசலில் ஒருகிணறிருந்தது அந்தக்கிணற்றிலேயிறங்கி அப்பாலே போவோமென்று இறங்கின சூஸ்திரப்பலகையானது மேலே மூடிக்கொள்ளுமென்றறிந்து அந்தக் கிணற்றிரொருகல்லைப் போட்டார் உடனே சூஸ்திரப் பலகை கிணற்றை மூடிக்கொண்டது அந்தப்பலகையின் மேலேறி அப்புறம்போனார். அந்தவாசற்கடந்துஇருபத்துநான்காம்வாசலிற்போகும்போது அந்தவாசலிலேகுங்குமச்சேறும் இருந்தது அப்போ எண்ணெய்ச் சீலையெடுத்து காலில் தடவிக்கொண்டு அந்தச்சேற்றிலிரங்கி அப்பாலேபோய்க்கரையேறிசொஞ்சநஞ்சமங்கங்கேபட்டிருக்கிற சேறெல்லா மூங்கிற்பிளவாலே நன்றாய்வருத்துப்போட்டு அங்கே வெள்ளித்தட்டில் வைத்திருக்கிற ஆழாக்குபனிநீரையு மெடுத்துக்கொண்டு அதிலேபாதி பனி நீரிலேகாலை கழுவிக்கொண்டு மற்றப்பாதிபனிநீரையுந்தமது பிறகே சூழ்ந்துவருகிறதாதிகள் கையிற் கொடுத்து இந்த பனிநீரைகொண்டுபோய் உங்கள்நாச்சியார் தலையிலேயூற்றுங்களென்று சொல்லி அந்தவாசற்

கடந்து இருபத்தைந்தாம் வாசலுக்கு வருகிறபோது அங்கேசித்திரமண்டபத்திற் பாரதராமாயணமற்று முண்டானதாகப் பிரசங்கங்க ளெல்லாமெழுதியிருந்தன அவைகளைப்பார்த்து நாமங்கே வேடிக்கைப்பார்த்துக்கொண்டிருந்தால் பொழுது விடிந்துபோகுமென்று நினைத்துச் சீக்கிரமாகப் போகச்சே பிறகே வருகிற மெண்ணச்சிகள் விறகு தலையனைப்பார்த்து இந்தச்சித்திரங்களிருக்கிறவினோதங்களைப்பாரும் பாருமென்று சொன்னார்கள் அதற்கு விறகுதலையனன நற்கீரர் சொன்னதாவது.

வெண்பா.

கலைகாட்டுங்கோகைக்கருஞ்சக்கரத்தின்
வலைதாட்டியாயிரம்பொன் வாங்கிக்கலைநெகிழாச்
சூத்திரமாய்த்தேடுங்குறிபோலிருந்ததிந்தச்
சித்திரமுஞ்செய்யுஞ்செயல்.

என்று சொன்னகவியைக் கற்றுச்சொல்லிகள்போய்த்தமிழறிவாளுக் குச்சொல்லத் தமிழறிவாளுஞ்சந்தோஷப்பட்டுச் சீக்கிரமாக அவனையழைத்துவாருங்களென அப்படியே யழைத்து வருகிறபோது இருபத்தாறும்வாசலிலே நீராழிமண்டப மிருந்தது அதற்குமிகப்புபோட்டுக்கொண்டு பள்ளமறிந்து கரையேறிப்போனார் அதுகடந்து அப்பாற் போகிறபோது இருபத்தேழாம் வாசலிலே பளிங்குமாமண்டபத்திற்போகையில் அந்த மண்டபத்தின் மேலே செய்துவைத்திருக்கிற சித்திரங்களைப்பார்த்தால் கீழே கால்சறுக்கிவிழுவான். அப்படி

விழாமல் உபாயமாகக்கடந்துபோயப்பால் இருபத்தெட்டாம்வாசலிலே தமிழறியுமண்டபமுங்கடந்து இருபத்தொன்பதாம்வாசலிலேஇயலறிமண்டபமுங்கடந்தப்பால்முப்பத்தோராம்வாசலிலேகூத்துப்பார்க்கிறமண்டபத்திற் கோழிச்சேவற்போரும் ஆட்டுக்கடாபாய்ச்சலும் இப்படியாகஅனேகவினோதங்களிருந்தன அந்தமண்டபத்திலேகூத்தாடுகிறதும்மத்தளதாளம்போட்டுக்கொண்டு நாடகப்பெண்களும்கூத்தாடிகளும்இவருக்கெதிரேபுகழ்ச்சிசெய்துக்கொண்டுஆடவந்தார்கள்இந்தவேடிக்கையைப்பார்த்துக்கொண்டிருந்தால் பொழுதுவிடிந்துபோகும் ஆனபடியால் வந்தகாரியமாக வேண்டுமென்று அவர்களைப்பார்த்து உங்களாட்டமும் பாட்டமும் நானோபார்க்கிறவன் உங்கள் நாச்சியாரே பார்ப்பாளென்றுசொல்லி அவர்களுக்குத் திராகங்கொடுத்து அதுகடந்தப்பால் கச்சேரிமண்டபத்துக்குப் போகிறபோது தாதிகள்போய்த்தமிழறிவாளுடனே இந்த முப்பத்தொரு வாசலுங் கடந்து வந்தானென்று சொல்லக்கேட்டு தமிழறிவாளுஞ்சந்தோஷப்பட்டு இத்தனை கட்டுக்காவலனைத்தையுங் கடந்து வந்தபோதே இவன் தேவனே யென்று அந்த மண்டபம் விட்டுத்தன்னரண்மனையேபோனாள் நக்கீரரும் அந்தக்கச்சேரி மண்டபத்துக்கு வந்தார் அந்த மண்டபமெப்படியிருக்கிற தென்றால் அறுபத்துநான்கு கால்கள்

பொற்றாணிருத்திமண்டபஞ் சோடித்துஅந்த மண்டப த்துக்கு நவரத்தினத்தாலும் பட்டுபட்டாவளி சீனிசீனு ம்பரத்தினுலும், அலங்கரித்து அதிலே மயில்கள் ஆட வும் குயில்கள், கூவவும் அன்னங்கள் நடந்து விளையாட வும் வண்டினம்பாடவும் பஞ்சவர்னக்கிளிகள் கொஞ்சிக் கொஞ்சிப்பேசவும் தென்றல்வீசவும் மேற்கட்டு கட்டிய சூஸ்திரப்பிரதமைகள் முப்பத்திரண்டு வகைமேளவாத் தியம்பண்ணவுஞ் சாம்பிராணி தூபமும்மல்லிகைமுல்லை சாதிபுன்னை மருக்கொழுந்து இப்படிக்கொத்த பரிமள திரவியங்களுங் கமகமவென்று பரிமளித்துக்கொண்டி ருக்க இப்படிநானுவிதமான அலங்காரமாயிருக்கப்பட்ட கச்சேரிமண்டபத்தில் களிற்றியானைத் தந்தக்கட்டிலும் நவரத்தினகசிதமாகச் சோடித்து இரண்டி கட்டிலுஞ் சோடாகப்போட்டிருக்கிற இந்தப்புதுமைகளை யெல்லா ம் பார்த்து நற்கீரதேவர் அதிசயப்பட்டு இத்தனைக்கு வல்லவளானபடியினுலேஇத்தனை ஆடம்பரப்புவட்டணை அலங்காரவலுமையினுலே தனக்கொருவரு மெதிரில்லை யென்றுவிருது கூடிக்கொண்டிருக்கிறுள் இவளை வெல் லுவது அருமையென்று விசாரப்பட்டு ஆனுலென்னநம் முடைய குருவாகிய சுப்பிரமணியக்கடவுள் பாதாரவிந் தமே துணையென்று அந்தக்கட்டிலண்டைக்குவந்து கட் டிலிரண்டையும் பெண்கட்டில் ஆண்கட்டிலென்றுபிரித்த

விபரம் தமதுகையினாலே ஒருகட்டிலை நெறுக்கியிருத்தி ப்பார்க்கத்தளர்ந்திருந்தது இதுபெட்டையானைத்தந்தக கட்டில் பெண்கட்டிலா மென்றறிந்தும் அதுகால்மாடு தலைமாடுதெரியாமலிருந்தபடியினாலேஅதனை அறியவே ண்டித்தமது கையிலிருந்த எலுமிச்சம்பழத்தைஎடுத்து அந்தக்கட்டிலின் நடுமையத்திலே வைத்தார் அது உரு ண்டுபோய் கால்மாட்டில் நின்றது அதுகண்டு கால்மா ட்டிற்சூஸ்திரப்பிரதமைகளுந் தலைமாட்டில் நிலைக்கண் ணாடியுமிருக்கிறது இலட்சணமா மென்றறிந்துகொண்டு அந்தக்கட்டிலின் பேரிலேறி வொருகந்தையை விரித்து ப்போட்டுப் படுத்துக்கொண்டார். கட்டிலே பிரதமை கள் கட்டியிருந்தபடியினாலே மேற்படி சூஸ்திரப்பிரத மைகளெல்லாங் கால்பிடிக்கவுங் கைபிடிக்கவும் உடம்பு பிடிக்கவும் மயில்விசிறியெடுத்து விசிறவுங்கண்ணாடி யெ டுத்துக்காட்டவும் வெண்சாமரை யெடுத்துவீசவும் இப் படியேசுப்பிரதமைகளெல்லாம் பணிவிடை செய்யத்தக் கதாக விறகுதலையனான நற்கீரதேவர் படித்துக்கொண் டிருக்கிறதைக்கண்டு கற்றுச்சொல்லிகள் முதலானபே ரும் ஆச்சரியப்பட்டு தமிழறிவாளுடனேசொன்னார்கள் அவளுங்கேட்டு விசாரப்பட்டு பின்புமனந்தெளிந்துகொ ண்டு இவன் உத்தமமென்கிறதற்குச் சேர்ந்தாலும் தோ ஷமில்லைமோட்சமுண்டு ஆனாலுமிவனுடைய திறமை யை இன்னமும் பார்ப்போமென்று தன்னுடைய தோ

ழியான இயலறியும்பெருமாளைவரவழைத்து அவளுக்குத்தன்னுடைய ஆபரணங்களை யெல்லாம் பூட்டிச்சிங்காரித்து வெகு ஆடம்பரத்துடனே யனுப்பினாள்அவளுந்தமிழறிவாள் வடிவாகவந்து நின்றபோது அவளைப்பார்த்து இவள் தமிழறிவாளல்லவென்று தன்மனதிலெண்ணிக்கொண்டு விறகுதலையனான நற்கீரதேவர் சொன்னதாவது.

வெண்பா.

முத்துநடையுமுகிழ்முலையுமெய்ஞ்ஞானச்
சத்திசிவம்போலத்தாதியார்—மெத்தெனவந்
தன்புருகாநெஞ்சத்தவரிருக்கநீர்வரலேன்
பொன்சிலம்புஞ் சிற்றடியாய்போம்.

இப்படியாகச் சொல்லக்கேட்டு இயலறிவாளும் நீரென்னை தூஷணித்தாலும் நல்லது வெகுமானமாய்ப் போவென்றீரே அதுவே போதுமென்று சொல்லிப் போய்த்தமிழறிவாளுடனே சொன்னாளதுகேட்டுத் தமிழறிவாளும் இனிமேல் யாரையனுப்பினாலு மாகிறதில்லை நாமேபோகவேண்டுமென்று தாயான மரகதவடிவியை அழைப்பித்துச் சொல்லுவாள் விறகுதலையனிடத்திற்கு நாம் ஆரையனுப்பினாலும் அவர்களை தூஷணித்து ஒட்டிவிடுகிறானே இனிநான் அவனிடத்திற்குபோகவேணுமேயென்றுகேட்க மரகதவடிவி சொல்லுவாள் விரகுதலையனுவதேது அவனிடத்திற்குநீபோகிறதேது இதென்ன மாயமாயிருக்கிறது நீ இதுவரைக்குந் தமி

ழறிவாளென்றுபேர் உனக்காருமெதிரில்லாமல் கீர்த்தி படைத்திருந்தாய் இப்போது வந்தவனுக்கு ஏற்றசமர்த்தராய்ச்சொல்லிக்கொண்டு சிறுபிள்ளைகளை யழைத்தவன்முன்னே கேளிக்கையாடச்சொல்லி வேடிக்கைப் பார்ப்பித்து பொழுதுவிடியப்பண்ணி இளிச்சவாய்ப்பித்தா மோசப்போனாயே யென்று அடித்தோட்டி விடுகிறதே யல்லாமல் அந்தவிறகுதலையனைக் கூடவும்விதியோ மகளே போகவேண்டாமென்றாள் அதுகேட்டுத்தமிழறிவாளுந்தாயான மரகதவடிவிக்குச் சொல்வாள்வந்தவன் எங்கேயாகிலும் மோசம் போனாலல்லவோ அடித்து ஓட்டிவிடலாம் நல்ல இலட்சணமறிந்தவனுமாய் மகத்தான வித்துவானுமாகக் கேட்டுக்கட்டுக்கு கல்வி சொல்லிக்கொண்டுவந்த சமர்த்தையு மறிவும் இப்பவும் உம்மிலும் வல்லமையானவனை நம்முடையவாய் வலிமையினாலே அடித்து ஓட்டிவிட்டால் பூமியிலும் அபகீர்த்திக்கிடமாகும் இவனும் வசைகவிபாடிப்போவான் இதுகாரியமல்லவென்று தாயான மரகதவடிவிக்குத் தமிழறிவாள் சொல்லிக் காண்பித்ததாவது.

வெண்பா.

கல்லாவொருவன்றேள்சேர்தலிங்கறறவனோ
டல்லற்படுவதழகன்றோ—சொல்லாய்க்
கரும்பிரசங்கைக்குமோகல்வியறிகோதாய்
விரும்புவரோவேம்பின் கனி.

என்றுசொல்லிக் காண்பித்தவுடனே தாயானமரக தவல்லி சம்மதித்து நல்லதுபோவென்று சொன்னாள் அதன்பிறகு தான்போய்ச் சலக்கமனே புகுந்து பச்சிலே பசுமஞ்ச ளரைத்து சலக்கமாடித் தான் பூண்டுகொண்டி ருந்த ஆபரணங்களெல்லாம்கழற்றிபோட்டு கண்ணுக்கு மையிட்டுக்கொண்டு சந்தனம் பூசிக்கொண்டு நெற்றிக் குத் திருநீறுங் கஸ்தூரிப் பொட்டுமிட்டுக்கொண்டு ஒரு வெள்ளைப்புடவை யுடுத்திக்கொண்டு தாதிகளிடப்பட்ட வுடமைக ளிட்டுக்கொண்டு இன்னந் தன்னையறியாமலி ருக்க வேண்டுமென்று முன்னாலே போய்வந்த இசைய றியும் பெருமாளே தானே முகனையாயலங்காரம் பண்ணி க்கொண்டு திரும்பவும் வந்தளே யிவள்தான் தமிழறிவா ளென்று அவன் மனதிலென்ன வேண்டுமென்று நினை த்து வெகு ஆடம்பரமாக மேளதாளங்களுடனேகட்டிய காரிகளெச்சரிக்கைச்சொல்ல இசையறியும் பெருமாளை முன்னே நடத்திக்கொண்டு தான்அவளுக்கு அடப்பகா ரியைப்போல பிறகே நின்று வெற்றிலேமடித்து நீட்டிக் கொடுத்துக்கொண்டு வருகிறவர்களுடைய விலட்சணத் தைப்பார்த்து முகமிருக்கிற ஒளியையும் பார்க்கிற பார் வையும் அவளுடைய ரூபாதிசயத்தையும் நடையினெ டிப்பையும் பிடியிலடங்கும் இடையும் மூன்றும்பிறைச் சந்திரனைப்போலேயிருக்கிற அவளுடைய முகப்பருவத்

தின் அழகையும் பார்த்து இவளே தமிழறிவாளாகவே ண்டும். இவள் தன்னாபரணங்களை யெல்லாம் கழற்றிப் போட்டு மாறுபாடாக வருகிறதுங் கபடமாயிருக்கிறதெ ன்று தமிழறிவாளைப் பார்த்துத் தூஷணித்துப்பாட நாவெழாமல் விறகுதலையனான நற்கீரர்சொன்னதாவது.

கலித்துறை.

கருகவிழித்தவிழிக்கணையால் வெய்யகாமனையன்
றுருகவிழித்தவிழியதுவோ விங்குவமையில்லாக்
குருபதத்திளங்கொங்கை மின்னாளிடங்கூடவின்று
பருகவிதத்திலனே வெய்ய காமப்பசிதனக்கே.

என்றுசொன்ன கவியைக்கேட்டுத் தமிழறிவாளும் இவன் நம்மைப்பார்த்து அறிந்துகொண்டு இத்தனையுவமையிட்டுப் பாடினானென்று சந்தோஷப்பட்டு அதிசீக்கிரமாய் பெட்டையானை தந்தகட்டிலென்கிற பெண்கட்டிலின்பேரில் முகனையாகவந்த இசையறியும்பெருமாளை யுயரவைத்துத் தான் கீழேயிருந்துகொண்டு வெற்றிலை மடித்து கொடுத்துக்கொண் டிருந்தாள். அதுகண்டு விரகுதலையனான நற்கீரதேவரும் இப்படிக் கபடமார்க்கமாக வெற்றிலைமடித்து கொடுத்துக்கொண் டிருந்தாள் எனக்குத் தெரியாதோ வென்று மனதிலெண்ணிக்கொண்டு எழுந்திருந்து வெற்றிலைபாக்கு கையிலெடுத்துக் கொண்டு வெற்றிலை மடித்துக்கொண் டிருக்கிறவள் கையிலே கொடுக்கப்போனார். அதை தமிழறிவாள் கண்டு

இவன் நம்மை யறிந்தல்லவோ நம்முடைய கையில் வெற்றிலை பாக்குக்கொடுக்க வருகிறானென்றெண்ணிக்கொண்டு அவர் முகத்தைய்யேறப்பார்த்து தமிழறியும் பெருமாள்சொல்லுவாள் நானொருகவி சொல்லுகிறேன் அந்த கவிக்கு பயன்சொன்னீராகி லும்முடைய கையிலே வெற்றிலைபாக்கு வாங்குவேன் இதல்லாமற்போனால் வாங்குவதில்லையென்றுசொன்னாள். அதற்குநற்கீரதேவர் சொல்லுவார் நீசொல்லுகிறகவிக்கு பயன்சொன்னலாச்சுது சொல்லாமற்போனால் உனக்கு ஆறுமாதம் ஊழியம் பண்ணுகிறேன் ஒருவேளை நீதோற்றால் என்னமாகிறது சொல்லும் பெண்ணேயென்றார். அதற்குத் தமிழறிவாள் சொல்லுகிறாள் ஒருவேளை நான் தோற்றேனேயாகில் தேவரீர் சொன்னபடிக்கு கேட்கிறேனென்றாள். அதுகேட்டு நற்கீரர் ஆனால் நீசொல்லுகிற கவியைச் சொல்லும் பெண்ணேயென்றார். அப்போது தமிழறிவாளு மிரண்டு கட்டிலுக்கு நடுவே பூந்திரை யிடுவித்துத் தமிழறியும் பெருமாளென்கிற வேஷத்துக்குண்டான ஆபரணங்களை யெல்லாம் பூட்டிக்கொண்டு பட்டு பட்டாவளி யுடுத்தி அளகத்துக்கு முல்லையணிந்துகைக்குப் புனுகுசவ்வாதிட்டு கொங்கைக்கு குங்குமகஸ்தூரி யணிந்து மார்புக்குக் கண்டசரம் முத்துமாலை யணிந்து காதுக்கு கொந்தளமணிந்து கைக்கு அஸ்தகடகமிட்டு

காலுக்குச் சிலம்பணிந்து அரைக்கு ஒட்டியாண மணி ந்து இசையறியும் பெருமாளை யரண்மனைக் கனுப்பிவிட் டுத்தான் கட்டிலின் மீதிலிருந்துகொண் டாலவட்டம் வீச உபய வெண்சாமரைவீசச் சர்வபூஷணாலங்கிருத மாக இருந்துகொண்டு தலையணை நற்கீரதேவருடனே வாக்குவாதம் பண்ணினதாவது,

வெண்பா.

ஐயஞ்சிருபத்தஞ் சேரிரவேயான்பெரினும்
வெய்யமதனைந்தணை மேல்வரினுந்—தையலாள்
கையஞ்சறியாத காளைதோள்சேர்வாளே
மெய்யஞ்சறப பெற்றமின்.

என்று சொன்ன கவிக்கு நற்கீரர் தன்னண்டையி லிருந்த அஞ்சறப்பெட்டியைத் தட்டிக் காண்பிக்க அத ற்குத் தமிழறிவாள் இதுயூகிபாஷியைப்போலிருக்கிறது தெரியச்சொல்லவேண்டுமென்ன நற்கீரர் பொருள் விரி த்த விவரம் ஐயஞ் சிருபத்தாவது காடுபடுவதஞ்சுமலை படுவதஞ்சு கடல்பாடுவதஞ்சுநாடு படுவதஞ்சநகர் படுவ தஞ்சு இவைகளுக்குப் பயன் காடுபடுவதஞ்சாவதுஅரக் கனிசெந்தேன் அணிமயிலின்பீலி திருக்கற்ற நாபியோ டைந்து கடல்படுவதஞ்சாவட, ஓங்குவளை சங்கொளி பவளம் வெண்முத்து பாங்கரிய வெள்ளுப்போடைந்து, நாடுபடுவதஞ்சாவது, நகர்படுவதஞ்சாவது, கண்ணடி பித்தன் கருங்குரங்கு காட்டானை மண்ணுளும் வேந்த

ளுடைந்து, மலைபடுவ தஞ்சாவது, மாணிக்கம் பச்சை வயிடூரியம், நீலம், ஆணிக்கணசுமோ டைந்து, கணையஞ் சாளது, முல்லையசோகு முழுநீலஞ்சூதகப்பூ அல்லிமு ளரியோ டைந்து, தையஞ்சாவது, எண்ணலெழுதலிலை கிள்ளல் பூத்தொடுத்தல் பண்ணமைந்த ஆழியோடை ந்து பொய்யஞ்சாவது கொட்டவி நெட்டை குறுகுறும் பை கூண் குருடு தட்டு விமுதலோடைந்து இப்படியெ ன்று நற்கீரர் பொருள் விடிவித்தபின்பு பின்னுந் தமிழறி வாள் சொன்னதாவது.

வெண்பா.

பாய்ச்சிப்பரிப்பார் பாதமேநான்குடைபார்
வாய்சகளம்புகுந்து வாழ்ந்திரும்பரா—வீச்சிப்
படைவாணர்தங்களுக்குப் பாரின்மேற்காணு
அடைமாவு மல்லவது.

என்று சொன்னதற்கு நற்கீரர் பொருள்சொன்னது.

வெண்பா.

கம்பைபலவைக்கடியிற்கால்கள் ஒருநாள்குளதாம்
ரைம்பொற்களமேறிப் பாய்ச்சுதலா—லெம்பெரிய
மாவல்லநல்லமரக்காலே மாநிலமன்
பூவலருங்கோதாய் பொருள்.

என்று பொருள் விடுத்துச்சொன்ன பின்பு தமிழ றிவாள் பின்னையுஞ் சொன்னதாவது.

சந்த--விருத்தம்.

அங்கரடிகொள்ளப்போ யானைகண்டேன்
அணிநகரமன்றினிலே சேனைகண்டேன்
கொங்காளுமுத்தரசர் தம்மைகண்டேன்
கொடித்தேரும்பரிமாவுங் கூடக்கண்டேன்
அங்கிருவரெதிர்நின்று வெட்டக்கண்டேன்
அதுகண்டியான்றலையைத் தாழ்த்தலுற்றேன்
அங்கிதனையின்னதென் றியம்புவோர்க்கே
எதிரில்லையுப்புவிக்கு ளென்றவாரே.

இந்தக்கவிக்கு நற்கீரர் பொருள் சொன்னதாவது.

சந்த--விருத்தம்.

எதிராங்கமன்றினிலே யேறக்கண்டேன்
எழுதரியதோமாவு மனிதர்கண்டேன்
அதிராங்கமாயிருவ ராடக்கண்டேன்
அவ்விவரெதிர்நின்று வெட்டக்கண்டேன்
சதுரங்கமிதுதானும் வேறொன்றல்ல
தார்குழலேநீதலைதயத் தாழ்த்தலேகேளு
வெதிராங்கமுடையதொரு மானேகேளாய்
வீணருக்கும்வேந்தருக்கும் வேலைதானே.

என்று பொருள் விடுத்த பின்பு பின்னையுந்தமிழறி வாள் சொன்னதாவது.

கவி.

அக்கரமுமெழுதவொண்ணு வாய்மையாவர்
ஆவின்பின்னே திரிவாரதுவுமின்றி

சக்கரமும்வலம்புரியுந் தரித்தேநிற்பர்
தாமுரலிற்கட்டுண்டு தயங்கிநிற்பர்
மிக்கதொருவடம்புனைவர் வெண்ணெயாடி
வெற்பெடுத்துமற்பொருது வேலைசூழ்வார்
திக்கெட்டுபுகழ்படைத்த தேவேகேளாய்
திருமாலுமல்லவிது செப்புவீரே.

இதற்கு நற்கீரர் பொருள் சொன்னதாவது.

கவி. குன்றுகமொழியுடைய வாய்மையாளர்
கோவின்பின்திரிவார் கோபாலரல்லர்
ஒன்றுகக்கடல்கடைந்து வெண்ணெயாடி
யுரலோடேகட்டுண்டு வழலாநிபர்
மன்றுடுமலையெடுத்து மல்லுப்போய்ந்து
மற்பொருதுவெற்பெடுத்து கொங்கிபூண்பர்
சென்றுடுமுறையூரிற் றேனேகேளாய்
திருமாலுமல்லவிது செக்குத்தானே.

என்று பொருள் விடுவித்த பின்பு பின்னையுந்தமிழறிவாள் சொன்னதாவது.

கவி. படிமுழுதுந்தரித்தங்கே மன்றுள்ளாடி
பத்தலுத்தருமங்கே பரிந்துநாடி
திடமுடையநான்முகனு மரியுந்தேடி
தேவரெல்லாம்போற்றறிய திங்கள்சூடி
வடமணியுமுலைமார்பு வராங்கட்போலே
வடிவுடையதிருமேனி தழும்புபட்டும்

படிமுழுதுமாளுவிக்கும் வல்லாதாமே
பரமனூர்தானுமல்ல பகருவீரே.

இதற்கு நற்கீரர் பொருள் சொன்னதாவது.

கவி. வடிவுடையார்பிறையணிவார் வணிகரெல்லா
வடிபடுவார்நாடோறும் மனிதர்காண்
அடிபடுவார்திருமேனி கழும்புமேற்பார்
அம்மையிலார்தகவாழ்வ ரதுருபன்றிக்
குடியினுடன்மன்னர் தங்கன்முண்ணேநிற்பார்
கூற்றமெனவறுபவரை மாற்றுவிப்பார்
படிமுழுதுமாளுவிக்க விலவர்தாமே
பரமனூர்தாமுமல்ல பணத்தினூரே.

எனச்சொல்லிப் பின்னும் தமிழறிவாள் சொன்ன தாவது.

கவி. கட்டியவன்கரையார் கால்பலவைவயுடையார்
இட்டதோர்மடுதனிலே யெய்தியதாமரையு
கொட்டியுநெய்தலுமே கூடிமுளைத்திடுமே
யிட்டதமிழ்க்கரசே யேரியுமல்லவிது.

இதற்கு நற்கீரர் பொருள் சொன்னதாவது.

கவி. கால்கழுமேலேநூலோடிக் கரைகள்சேர்த்துக்
கற்பாகப்பல்விட்டுக் கஞ்சிவைத்துப்
பரவுதல்போல்நூல்தொடுத்து இழைதிருத்திப்
பசுமையாயூடைவிட்டுப் பிணையல்செய்து
பூவலரும்நெய்துலகிற் கொட்டியிட்டுப்
பொருந்தியதாமரையும் பூத்தேநிற்பார்

வேல்பொருதுங் கண்ணுளேயேரியல்ல
மேகலையென்றேயிதனை விளம்புவாரே.

என்றுசொல்லக்கேட்டுத் தமிழறிவாள் சொன்னது.

கானகத்திருந்துபோந் துகைகளாற்குத்துமுண்டு
தானந்தக்கூடந்தன்னிற் றன்பனிநீருமாடி
மேனிலத்துவளங்கொண்டு வீதியும்வருவாரங்கே
ஆனையுமல்லகண்டீ ரறிந்திடீராசர்கோவே.

என்றுசொல்ல நற்கீரர் பொருள் சொன்னதாவது.

கவி-கானம்பொற்கூடந்தன்னிற்றன்கையிற்குத்துமுண்டு
தேனுடன்பாலுநெய்யுந் தெவிட்டநல்லமுதுசெய்யு
மானவேல்விழியினலே மாநிலத்தார்கட்கெல்லாம்
ஆனையுமல்லகண்டீ ருருங்கல்லதானேயென்றார்.

என்றுசொல்லப் பின்னுந் தமிழறிவாள் சொன்னது.

வெண்பா.

அக்கடாபோகக்கண்டா திரண்டிலொன்றையுண்
டிக்கடாவீடாயிருப் பாரை-யொக்கிடா
ஒன்னார்புரத்தைத முனிந்தாரேயநொளி
முன்னனகிலொன் றுடையான்முன்.

என்றுசொல்ல விதற்குப் பாண்டியன் முன்னே நரி
யைப்பரியாக்கினதென்று நற்கீரர் பொருள் விடித்தார்
பின்பு தமிழறிவாள் மறுபடியுஞ் சொன்னதாவது.

கவி. நீரிலானது தானவைமூன்றுள
நெடியகானில் விளக்கொருமூன்றுள

ஊரிலாடவும்பாடவுகொட்டவு
மொன்றிலொரு பேதையராமெனச்
சேரவாங்கு தனுசுடன்கூடவே
தெற்குமாமுனி தன்னையுமாகவே
பாரின்மீது இயலவல்லார்க்கிது
பன்னிரண்டு வருஷம்பகருமே.

இதற்கு நற்கீரர் பொருள்சொல்லுவார் நீரில்மூன்றுவது மகரம், மீனம், கர்க்கடகம், கானின் மூன்றுவது மேஷம், ரிஷபம், சிங்கம் ஊரில் மூன்றுவது ஆடுவது துலாம் பாடுவது மிதுனம் கொட்டுவது தேள் பேதையாவது கன்னி தனுசாவதுவில் தெற்கு முனியாவது கும்பமென சொல்லப் பின்னுந் தமிழறிவாள் சொன்னதாவது.

வெண்பா.

வருவார்குடிபுகுவார் வாய்கூப்பிநிற்பார்
பாரெல்லாந்தானே பரிந்திருப்பார்நீரிற்
சுழித்தேறுபாவித் துறைநாடாசொல்வாப்
பெழுத்தாணி யல்லவிது.

இதற்கு நற்கீரர் பொருள் சொன்னதாவது.

வெண்பா.

வருகுவார்குடிபுகுவார் வாய்கூப்பிவந்து
பாரெலாந்தானே பரிந்துழல்வர்சீரெல்லா
கச்சிருக்குங்கொங்கைக் கனங்குழைபார்காங்வண்ண
னித்திரையினீர் காணிலுப்பு.

பின்னுந் தமிழறுவாள் சொன்னதாவதுவெண்ணாய் யஞ்சுபாணந்தொடுத்தான்வெளிப்பொழுதே மெய்பஞ்சு விட்டாலு மியான்வேண்டேன் மெய்யாககை யஞ்சுடை யான் கதிர்முகத்தி லொன்றுடையான் மெய்யஞ்சுடை யான் விளம்பு.

இதற்கு நற்கீரர் பொருள் சொன்னது.

வெண்பா.

நினைக்குமரவிந்த நீள்பசலைசூத்ம
அனைத்துணர்வுமாற்றும் சோகந்தனித்திருந்து
முல்லைகிடைகட்டு மானேமுழுநீலங்
கொல்லுமதனம் பின்குணம்.

என்று சொன்னது கைஞ்சுடையானுவது தேரின் வணைண்மஇறைமிம்மை நெருப்புக்குறி நுண்மையோடை ந்து கதிர்முகத்தி லொன்றுவது சூரியனைப்போல் ஒளி யுடைய முகமென்பது மெய்யஞ்சுடையனுவது சோம் பல் நடைநெட்டையுடல் முறுத்தல் வெப்பி கற்றுழை யோடைந்து என்றுசொல்லத் தமிழறிவாளைப்பார்த்து நற்கீரர் சொல்லுவார் நீசொன்ன கவிகளுக்கெல்லாம்கா ன்பயன் சொன்னேன் இனி ஒருகவிசொல்லுகிறேன் அ தற்கு பொருள்சொல்லென்று தமிழறிவாளுக்குநற்கீரர் சொன்னதாவது.

வெண்பா.

பஞ்சவர்கள்பேரும் வடிவுமர்குணமுந்
தஞ்சமுடனேயதனைச் சாற்றவேநெஞ்செதிரே

யின்னவகையின்னடை வடவேந்தனையும்
சொன்னார்புலவர் தொகுத்து
இதற் குத் தமிழறிவாள் பொருள்சொன்ன விபரம் யஞ்சவர்கள் பேராவது பிரிதிவு அப்புதேய்வு வாயு ஆகாசம் வடிவாவது மெய்வாய் கண்மூக்கு செவி குணமாவது சத்தம் பரிசம் ரூபம் சரம் கந்தம் உணவாவது கரண்டல் கேட்டல் உண்ணல் உடுத்தல் உயர்த்தலென்று சொல்லும் பின்னையும் நற்கீரர் சொன்னதாவது.

க வி.

படிதனையிறுக்கப்பற்றிப் பருநிலமதிரக்குத்தி
யுடல்தலையன் றுபாய்ச்சி யங்கையும்புக்கினின்று
கொடிபலசூழ்ந்தாலுங் குமுறியேவளைத்தலாலு
வடிவுடைமாதேகேளாய் மதகரியல்லகண்டீர்.

என்றுசொல்லத் தமிழறியாள் பொருள்சொன்னது.

வெண்பா.

சாற்றல்வினைவாகுந் தாரணியின்மீதினிலே
மாற்றலரைவல்லவகை யுளநேரசேற்றுகும்
ஆற்றுமையாலிந்த வம்மடுவிற்றுன்கவிழ்க்கும்
ஊற்றுலேகாணி கருந்து.

என்றுசொல்லித் தமிழறிவாள் விறகுதலையனுனை நற்கீரரைப்பார்த்துச் சொன்னதாவது.

வெண்பா.

பன்னுகலைக்குரிய வல்லீரேயாமாகிற்
பன்னும்விறகுதலைப் பாவலரேயின்னமுநீ

சொல்லுதியோ வென்றுரைப்பச் சொல்வேன்சொல்லு
வல்லமையாஞ் செந்தமிழின்மான். (மென்றாள்

என்றுசொல்லினவுடனே நற்கீரர் சொன்னதாவது.

கவி. ஞாலமிகுத்திருக்கு மல்லகரியமேனி
நானிலத்திலறியாத தேசமில்லை
காலுமுண்டுகாசினியி நடக்கமாட்டார்
சுருதரியசிறகுமில்லை பறந்தேபோவார்
சீல மூடன்மைந்தரையும் பெருவார்கண்டீர்
சினேகிதர்வந்தடுப்பார்கள் சேரவொட்டார்
ஆலமுண்டகண்டத்தா ரருளினாலே
ஆராய்ந்த்தயிப்பொருளை யறிந்திடாயே.

என்றுசொல்ல தமிழறிவாள் பொருள்சொன்னது.

கவி. தேங்குடாவிலுப்பை புன்னைவடவாலத்தி
செய்யமாதளை கொய்யான்றேசாலத்
தாங்கிலரிகோபுரங்கள் சாலைசோலை
சாரளபரங்கள் திருக்கோயிற்றருகுவிக்கும்
ஆங்கிலணிபணியாக விளங்களோடும்
அணிதேர்புக்காவனங்க ளடுத்துவாழும்
மாங்கனிக்குத்தூங்குதலை கீழாய்நிற்கும்
வவ்வாலென்றிதன்பேரை வகுக்களைமே.

என்றுசொல்லி பின்னும் நற்கீரர் சொன்னதாவது.

கவி. படைதனிற்சென்ற வையருளத்தொளைத்துநேரே
பாவலரையருக்க பெரிதானகுதிரையேறும்

கோட்டைகொள்ளுங் கொக்கரிக்குங்கொள்ளை
அடலுருவவேலெறிந்த பறையைத்திர்க்கும்
ஆராளிபுவியாளு மாற்றுனல்ல
விடைமிகுத்த சிவனருளாற்றெரிந்துநன்ருய்
விபரிசையாலக்கவியை விளம்புவாயே.

என்றுசொல்லத் தமிழறிவாள் பொருள் சொன்னது.

கவி. செந்திருக்கப்பூச் சூடிகனலுமேந்தி
திருக்கரத்தில் மானுமொருமழுவுமேந்தி
விந்தைகனையிடப்பாகந் தனிலேவைத்து
விமலராதிருமகனுர் விரதத்தோடு
கந்தருக்குமுன்பிறந்த கங்கைமந்தன்
மடகரியாபவிகடதடக் கமலபாதன்
தந்திமுகனேறு பெருச்சாளியென்றே
தாரணியில்வாகுலக்கள் சாற்றலாமே.

என்று தமிழ்றிவாள் சொன்னபின்புநற்கீரர்சொன்ன
தாவது.

கவி. வீரமுடனுடனைத்து முடையார்சால
விடையிலுகந் தேறுவார்சிவனுரல்லா
பாருலகில்புல்லருக்கு முதவியாவார்
பண்பானபூமுடிப்பார் பாவையல்லார்
தாரணியிலவரவர்தந் தொழில்செய்விப்பார்
சகலகலைநிறைமுடையோர் மறையோரல்லர்
சீருகிவிவர்யாரோ தெரிந்துகொண்டு
சேயிழையேயிப்பொருளைச் செப்பிடாயே.

என்றுசொல்லத்தமிழறிவாள்பொருள்சொன்னதாவது.

கவி. கருதலர்கள்படைநடுங்க கவகரமாளக்
கடகமுடைபடை துரக்கரிதேர்மாளக்
பரிதியொளிவாமினிய கம்பத்தானும்
பாலருமெம்மையு மரக்கர்பலரும்வீழ
மருவலரைச்சிரமறுத் தகிரிவேந்தன்
மால்தமக்குமருகனென்னும் வள்ளிபங்கன்
செருவில்வருமசுரர் குலகாலனெங்க
செந்தில்வடிவேலரது சேவலாமே.

என்றுதமிழறிவாள்சொல்யபின்புநற்கீரர்சொன்னதாவது.

கவி. தும்பிபுண்ணு பூமலருங்காயுமுண்டு
சோறுமுண்ணார்பசியாது வயிறுமுண்டு
வெம்பியதோபழம்பழுக்கு மடுப்பார்தின்னார்
வீடுமுண்டுசம்பதனல் மேய்ந்தநல்ல
கம்பியதோரவரவரே நம்பமாட்டார்
நல்லநல்லநிறமுடையார் நளினகாமன்
அம்புசெறிகும்பமுலை மாதேகேளா
யாராய்ந்தேயிப்பயனை யறிந்திடாயே.

என்றுசொல்லத் தமிழறியாள்பொருள்சொன்னதாவது.

கவி. பன்னுமொருச்சகத்தி முனியேகூறம்
பரிமளகெந்தியுந்தாங்கிப் படகையோட்டைக்
கன்னியங்கண்டம் முனியுந்தழுவிச்சாரச்
சந்தனராசன்னுதித்த தனகமையாலே

அன்னவர்கள் குலத்தில்வருங்குந்திதேவி
யருள்புதல்வர்காந்தாரி யளித்தசேயன்
சொன்னதுரியோதனனு மைவர்கூடச்
சூதாடித்தோற்றதுவுஞ் சொக்கட்டானே.

என்றுதமிழறிவாள்சொல்யபின்புநற்கீரர்சொன்னதாவது

கவி. சிற்றுடையுடுத்திக் கச்சிறுமியல்ல
சிறந்தநன்னூலணிந்திருக்கு மறையோனல்ல
ஒத்தேமெய்யெண்ணெயிடும் வணிகனல்ல
வொணகழுத்தில் மணிகட்டயாரிடபமல்ல
சித்தாரப்புரமெரித்தார் முன்னேநிற்பார்
சிறந்தபணிவிடைக் குரிவாதியரல்லா
பொற்பாதம்பூண்டிருக் குந்திமாலல்ல
பூவையேயிக்கதையைப் புகலுவாயே.

என்றுசொல்லதமிழறிவாள் பொருள் சொன்னதாவது.

கவி. மந்தாரப்பச்சை முல்லையறுகுகங்கை
மதியுடனேகொன்றை தும்பைமலருஞ்சூட்டி
யெந்தாயம்பிகையானை யிடத்திலேந்தும்
யீசரதுதிருக்கோயின் முன்னேநிற்குங்
கோந்தாருமலராடை யணிந்துகொண்டு
குவலயமென்றிருவிழாக் கொள்ளுங்கண்டீர்
ஐந்தானகாரியமு மறிந்தகோவே
யரியகொடுக்கம்பமென்றே யறையலாமே.

என்றுதமிழறிவாள்சொல்ல விறகுதலையனுன நற்கீரர் இந்தப் பிரசங்கத்தினுலேபொழுது விடிந்துபோகுமென்றெண்ணிக்கொண்டு அந்தத் தமிழறிவாளைப்பார்த்துச்சொன்னதாவது. வெண்பா.

ஆய்ந்தசயனத்தில் லாயிழையயன்றியே
போந்தவணிகிடக்கப்போகுமோ-வாய்ந்த
முன்னுன்முலையுமுழுமதியுமன்றியே
யெந்நான்குமென்செய்வேன்யான்

என்றுவிறகுதலையனுன நற்கீரர்சொல்லக்கேட்டுத் தமிழறிவாளுக்கு மன்மத விகாரமுண்டாகி திரையை வாங்கிப்போட்டு விறகுதலையனைப்பார்த்தாள் பார்த்தபோது அந்தவிறகுதலையனுன நற்கீரர்பின்னுந் தமிழறிவாளைப் பார்த்துச்சொல்லியதாவது.

வெண்பா-என்னைவிறகுதலையனெனவேயிகழ்ந்தாய்
மின்னிடையும்செற்றதொரு மெல்லிநல்லாய்-மன்ன
வக்கள், தோராவழகுடையான்றேளின்மேலே யணைந்
து, சேராதவாறுதனைச்செப்பு.

என்றுநற்கீரர் சொல்லக்கேட்டு தமிழறியும் பெருமாள்அதிகசந்தோஷமாய் மன்மதவிகாரம்பொருக்கப்போகாமல் எழுந்திருந்துவந்து தன்னைக்கூடச்சொல்லி விறகுதலையனுன நற்கிறதேவரைக்கட்டிக்கொண்டு சொன்னதாவது. வெண்பா.

வெண்பகையிறுக்கக்காமநெறியிருக்கக்காதலுடன்
மெய்யுருகக்கண்டம்விழிபருக-மெய்குழலாள்

பாகுஞ்சுவையும்பசுந்தேனு பழம்போ
லாகமுறக்கூ டென்றுளாங்கு.

இப்படிசொல்லிக் கட்டிக்கொண்டவுடனே நற்கீர தேவரும்விசாரப்பட்டு நாமிவளைக்கூடினால் சங்கப்பல கையும் போருதுநான்குக மாயிருக்கப்பட்டநாம் இப் போதிந்தக்காரியம் செய்தோமேயாகில் சங்கத்தாரும் நகைப்பார்கள் ஆகாசவாணி பூமிதேவியும் நகைப்பார் கள் உலகத்திலே அபகீர்த்தியுண்டாகும் இவைகளுமன் றிவிறகு தலையனுக்கல்லவோ கட்டிவைக்கிறேனென்று பிரதிக்கினைசெய்துக்கொண்டு வந்தது அப்படியிருக்க நாமிவளைக்கூடுகிறது நீதியல்லவென்று ஓடினமனமைத் திருப்பித்தமிழறிவாள் தம்மைக் கட்டிக்கொண்டகை யைக் கவியினாலேவிடுவிக்க வேணுமென்றெண்ணிச் சொல்லுவார்.

வெண்பா—ஒருவனொருத்தியாயூரில்லாவூர்புக்
கிருவற்கிருவகையும்பெற்றான்—இருவரிலே
முத்தானைக்கொன்றான்பகைவனகர்தீயிட்டான்
றாதைவருமளவுந்தான்.

என்றுசொன்னமாத்திரத்திலே தமிழறிவாள்கட்டி க்கொண்டிருந்த கையைவிட்டுக் கட்டிலைவிட்டிறங்கி அப் பாலேபோய் சுற்றிலும் பனிநீரிறைத்து மயில்விசிரியை யெடுத்துக்கொண்டு அந்த விசிறிக்குப்பனிநீரைத்தெளி த்து நற்கீரருக்கெதிரேநின்று விசிறிக்கொண்டு அவர் சொன்னகவிக்குப் பொருள்சொன்ன விபரம் ஒருவனொ

ருத்தியாராவது சூரியனுக்கு ரதசாரதியாகிய அருண
னென்பவன் ஒருநாள் சூரியனைப்பார்த்து நான் தேவ
லோகம்பார்த்துவருகிறேனென்று சூரியனிடத்திலே வி
டைபெற்றுக்கொண்டு முப்பத்துமுக்கோடி தேவர்கள்
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள்புடைசூழ மேனகாரம்பை
ஊர்வசி திலோர்த்தமை யென்று சொல்லப்பட்ட தேவ
கன்னிகைகள் நடனஞ்செய்யக் கொலுவாயிருக்கிற தே
வகன்னிகைகள் நடனஞ்செய்யக் கொலுவாயிருக்கிற
தேவேந்திரன் சபைக்கு ஒரு பெண்வடிவாய் வேஷங்
கொண்டு அருணன் போனான் அப்போது இந்த பெண்
ணைக்கண்டு தேவேந்திரன் மோகித்துகூடினான் அந்நேர
மே ஒருபிள்ளைபிறந்தது அந்தப்பிள்ளையை யெடுத்துக்
கொண்டு திரும்பவும் அருணன் சூரியனிடத்திற்கு வந்
தான் சூரியன் அவனைப்பார்த்து இந்தப்பிள்ளையுனக்கே
தென்றான் நான் ஸ்திரீவேஷங்கொண்டு தெய்வலோகத்
தில் தேவேந்திரன் சபைக்குப்போயிருந்தேன் அங்கே
தேவேந்திரன் என்னைக்கண்டு மோகித்துகூடினான் அப்
போது பிறந்தது இந்தப்பிள்ளை யென்றுசொன்னான் அ
ந்த விசேஷங்கேட்டுச் சூரியன் அருணனைப்பார்த்து அ
ந்தரூபத்தை நான் பார்க்கவேணுமென்றான் நல்லதென்
றுசொல்லி முன்னெடுத்திருந்த ஸ்திரீரூபத்தை யெடுத்
தான் அதுகண்டு சூரியனும் மோகித்துகூடினான் அப்
போது ஒருபிள்ளை பிறந்தது அந்த இரண்டுபிள்ளைகளி
லே மூத்தபிள்ளை வாலி இளையபிள்ளை சுக்ரீபன் அந்த

வாலியைக்கொன்றவர் இராமர் இராமருக்குப்பகையா
ளி இராவணராகிய இலங்கைப் பட்டணத்தை தீயிட்ட
வன் அனுமான் அந்த அனுமானுக்குத் தகப்பன் வாயு
அந்தவாயுவாகிறது காற்று நான்கட்டிக்கொண்டது இ
ருக்கமாயிருக்கிற தென்று அந்த காற்றுவருந் தனிலுநில்
லென்றுசொன்னீறென்று தமிழறிவாள் சொல்லிக்கொ
ண்டிருக்கிற வேளையில் ஒருகெவுளி சொல்லிற்று அதை
நற்கீரர் ஆண்டு பார்த்து நன்றாயிருக்கிறது நாம் வந்த
காரியம் ஜெயமாகு மென்றெண்ணிக் கொண்டிருக்கிற
போது தமிழறிவாளும் அந்தகெவுளியையாண்டு பார்க்
குமளவில் அது தனக்கு மரணஞ்சொல்லுவதென் றறி
ந்துகொண்டு நற்கீரரைப்பார்த்து அந்தகெவுளி யென்ன
சொல்லுகிறதென்று கேட்டாள் அதற்கு நற்கீரர் இனி
யொருதக்ஷணநேரத்திலே சாவுசொல்லுகிற தென்று
சொன்னார் அது கேட்டு தமிழறிவாளும்அப்படிபிராப்தி
இருந்தால் தப்புகிறதில்லை உமக்கு அந்தகெவுளி யென்
னசொன்னாலதானென்னநீசொல்லுகிறகவியைச் சொல்
லலா மென்றாள் அதுகேட்டு நற்கீரர் சொல்லுவார் நல்ல
தினாலொரு கவி சொல்லுகிறேன் அந்தக்கவிக்குப் பொ
ருள்சொல்ல வல்லவியோவென்றார் அதற்குத்தமிழறி
வாளும் நீரத்தனைவல்லவரோ வென்றாள் ஆனாலென்ன
நான் தோற்பேனேயாகில் என்குடுமியும் பூநூலு மறுத்
துப்போட்டு உன் வீட்டிலே வெள்ளாட்டிப்பையலாயி
ருந்துகொண்டு உனக்கேவல்பணிவிடை செய்கிறேன் நீ

தோற்ருல் அதற்கென்ன சொல்லுகிரு யென்றுகேட்க நான் தோற்றதேயுண்டானுல் என்னரண்மனையு மிடிப் பித்துத்தமிழறிவாளென்கிற பெயரையுமாற்றிப்போட்டு என் தலையையுஞ்சிறப்பித்து கழுதையின்மேலேற்றிஊர் வலங்காட்டி யோட்டிவிடுமென்ரு ளதற்கு நற்கீரர் சொன்னது நீ தோற்றதே யுண்டானுல் எனக்கிஷ்டமானவ னெவனே எந்தநீச்சனுக்காகிலும் உன்னைக்கட்டிவைப் பேனென்ருர் நல்லது அப்படியே யாகட்டுமென்ருள் அப்போது நற்கீரதேவர் இலக்கணகாரியங்களினுலே வெல்லக்கூடாதென்று நினைத்துத் தாம்வருகிறபோது காட்டுவழியிற்கண்டதை ஒரு வெண்பாவாகப் பிணைத்துக் கொண்டு கண்டசுத்தியாகச் சொன்னதாவது.

வெண்பா-நச்சுத்தேநேரிநடுக்காட்டில்வேடுவச்சி
பச்சைக்கொடியாடநின்ருளே—இச்சித்தே
மேழவனங்கவிழ்ந்து மின்கொண்டுபோகின்ற
மூலபலன்கண்டாய்மொழி.

என்றுசொன்ன மாத்திரத்திலே இந்தக்கவியைக் கேட்டு தமிழறிவாளுந்தான்கற்ற பஞ்சலக்ஷணத்தினுலு மற்றுமுண்டான நூல்வழியெல்லா மாராய்ந்து பார்த்து ஒன்றுந்தெரியாதபடியினுலே விசாரப்பட்டு இத்தனைக் காலந்தமிழறியும் பெருமாளென்று பேர்பெற்று யாருமெதிரில்லாமல் கீர்த்தியடைந்திருந்தோம் இந்த வெண்பாவுக்குப் பொருள்தெரியாமற் போச்சுதென்ருல் தமிழறியும்பெருமாள் தோற்ருளென்று உலகத்திலே இகழ்

ச்சியாகச் சொல்லிக் கொள்ளுவார்களே யென்று வெகு கிலேசத்துடனே நற்கீரரைப்பார்த்துத் தனக்குஒன்றுந் தெரியாதபடியினாலே மொத்தார்த்தமாகச் சொன்ன தாவது. வெண்பா.

உண்டிகொடுத்தார்க்குயிர்கொடுத்தாரென்னுது
வண்டார்குழலாள்மகிள்வன்றி—உண்டி
உண்டாருஞ்செத்தாருமுண்டிருந்தாருண்டீர்
உண்டானரகம்புகார்.

என்றுசொல்லிக்காண்பித்து நிலைக்கண்ணுடியை யுடைத்து அந்தஓட்டினால் தனது வயிற்றைப்பீறிக்கொண்டு சிவனைவிட்டாள் பொழுதுவிடிந்தது நற்கீரதேவருந்தமிழறிவாளைமூடிவைத்து அவள் போகிறகள்ளவழியைக் கண்டுபிடித்து அந்த வழியாகப் புறப்பட்டுப்போய்விறகுதலையனிடத்திற்கு வந்து தம்முடைய வேஷத்தைநீக்கிப்பச்சைவடம் வேஷ்டி தலைப்பாகை கட்டிக்கொண்டு கடுக்கன்மோதிரமிட்டுக் கொண்டு விறகுதலையனை எப்போதும்போல விறகுதலையனுக்குண்டான வேஷம் போட்டு அங்கேயிருக்கச் சொல்லிநற்கீரர் பாதக்குறடு கொண்டுகையிற்பொற்பிரம்பு பிடித்துக்கொண்டு நடந்து போய்ச் சோழராசனைக் கண்டச் சதைகொடுத்து ஆசீர்வாதம்பண்ணி அந்தச்சோழராஜன் இருக்கச்சொன்ன இடத்திலேயிருந்தார் இப்பால் மரகதவடிவியென்பவளி ராத்திரிமகள் விறகுதலையன்பக்கலுக்குப் போனவளின்னமெழுந்திருந்து வரவில்லையென்று தன்தோழிமாருந்

தானுமாக அந்தப்படுக்கை வீட்டுக்குப்போய்ப் பார்க்கிறபோது மறித்துக்கிடக்கிறதுகண்டு அடித்து அலறி விழுந்து எழுந்திருந்து இப்படிக்கொத்தமகளை எந்தப் பிறப்பிலே காணப்போகிறேனென்று வெகுதுக்கத்துடனே தன்மகளைப்பார்த்துச் சொன்னதாவது.

வெ-நற்கீரர்சொற்கவிக்குநாடவிடமன்றியிலே [யாள்
பொற்கொடியாட்குத்திரங்கள்போதாமற்சிற்றிடை
கண்ணாடியாலுயிரைப்போக்கினாள் காரிகையும்
பண்ணாள்தமிழறிவாள்பார்.

என்றுசொல்லி மரகதவடிவியுந் தோழிமாருங்கற்றுச்சொல்லிப்பெண்கள் மற்றுமுண்டான பேரனைவரும் புறப்பட்டுங் கூச்சலிட்டுக் கொண்டுபோய்ச் சோழராசாவின் முன்னேவந்து முறையிட்டார்களப்போதுசோழராசனும் வெகுவாய் வியாகூலப்பட மரகதவடிவியையழைத்துவந்தவனார் போனவனார் நடந்தவிவரமெப்படியென்றுகேட்க மரகதவடிவி சொல்லுவாள் சுவாமி ஆரோதெரியாது வெட்டியான்போலே யிருந்தது அவன் ஒருகட்டு வாழைத்தண்டைத்தனது தலைமேலேவைத்துக்கொண்டு விறகுவிலைகூறி கவிசொல்லிக்கொண்டுவந்தான் அவன் இராத்திரியெல்லா மகளுடனேபிரதிவாய்த்துக் கொண்டிருந்தான் நாங்களும் சிறிதுநேரம் விழித்துக்கொண்டிருந்தோம் பிற்பாடு அவரவர் அங்கங்கே படுத்துக்கொண்டு நித்திரைபோனோம் பிற்பாடென்னநடந்ததோ ஏதுநடந்ததோ அவன் சொன்னகவிக்குப்பொ

ருள்தெரியாமற்றுன்போச்சுதோ ஏதொன்றுலுங்காணக் கூடாது மாண்டுபோனுளென்று சொன்னுள் அதுகேட் டுச் சோழராஜன் மிகவும் விசனப்பட்டுச்சொல்லுவான் முன்னேதங்களுடைய வங்கிஷத்திலே ஒரு புறவுக்கா கத்தன்னுயிரை யீய்ந்ததும் ஒருமாயக்கன்றுக்காகக் கு மாரனே வண்டியிலறைந்ததுமாக இப்படி யிருக்கப்பட்ட சோழவமிசத்திலே இப்படிக்கொத்த பழிவந்தால் நா னேதுசெய்வேனென்று மிகவுஞ்சிந்தையில் வியாக்கூல மாய் அந்தச் சபையைப் பார்த்துச்சொன்னதாவது.

வெ-முற்பழிக்கொன்றுருயிரையன்றுமுறைவருவர்
கற்பகத்தேரூர்ந்தபழிக்காகாதே—சொற்பகரு
மைப்பழிக்குங்கூந்தல் வன்முலேயாள்தன்னுடைய
விப்பழிக்கு மென்செய்வேன்யான்.

என்றுசோழராசன் சொல்லிப்பின்னேயும் விசாரி க்குமளவில் அந்தச்சபையிலிருக்கிற நற்கீரைக்கண்டு அ வர்வசனிக்கப் பட்டவசனத்தைப் பூராயமாகக்கேட்டு நிதானித்து இராத்திரிவந்து பிரசங்கபண்ணினவர் இ வரேயென்றறிந்துக்கொண்டு சோழராசனேப் பார்த்து மரகதவடிவிசொன்னதாவது.

வெண்-கைபாற்கொடையான் கதலிவிறகுவிற்பான்
பொய்யானுமென்னூர் பொருள்காண்பாள்மெய்யாக
மையாரும்வேற்கண்மடமாமனேமன்னவனே
ஐயகோகொன்றுரவர்.

என்றுசொல்லக்கேட்டு நற்கீரதேவர்சோழராசனே

ப்பார்த்துச்சொன்னதாவது. வெண்பா.

பொய்யாதமுத்தமிழின் பொற்குடிக்குச் சூழ்ந்த கொலை, கொய்யாமதுமாலை கொற்றவனே மெய்யகா மையாரும்வேற்கண் மடமாமனைமன்னவனே, கையாரக்கொல்விலோங்காண்.

என்றுசொல்லக்கேட்டுச் சோழராஜனும்நற்கீரரைப்பார்த்துநீயாரென்றுகேட்க அதற்குநற்கீரருஞ்சோழராசனைப்பார்த்துச் சொன்னதாவது.

வெண்-நாலாயிரத்துத்தொளாயிரமாஞ்சங்கத்தின்
மேலாலநற்கீரரெம்பெயர்தான்—வேலால்
உளைந்தபுருவுக்காவுன்சதையைநேரா
யளைந்தேயறிந்தவனேயாம்.

இப்படிச்சொன்ன நற்கீரரைப்பார்த்து சோழராஜன் சொன்னதாவது.

வெண்பா-உறவற்றூர்போலிவ்வுறையூர்க்கும்புக்கிப்
பொறையுறைநாணிவம்பூதலத்தி--லறையும்
நரைகமழுநற்கீரானுக்காலிந்த
விறகுவிற்பதேனோவிளம்பு.

என்றுசொன்ன சோழராஜனைப்பார்த்து நற்கீரர் சொன்னதாவது.

வெண்பா-கூறுவார்கூறும்பரிசேகுறைவரியாள்
வீறுமென்னென்றுவிடவறியாள்மாதுடனே
வற்சுவாரேச்சும்ளளிதாகுமன்றியிலே
ரீச்சுவாசம்வாங்காதென்மின்.

என்றுநற்கீரர்சொல்ல இராசாவினுடைய மந்திரிந
ற்கீரரைப்பார்த்துச் சொன்னதாவது.

வெண்பா-பூவேசிலபறிப்பார் பூணேசிலபடுலர்
பாடிவேயடிதலைபின்யண்பாகுஞ்—சாவே
மகரங்கள்வண்டுண் ணும்மாவேவடுவாம்
இதுதவிரவுண்டோவியம்பு.

இப்படி மந்திரிசொல்லவே நற்கீரதேவருக்கு மகா
கோபம்வந்து இவனோநம்மைப்பார்த்துச் சொல்றாகிற
வனென்று அப்போதுசோழராஜனுக்கு அற்புதவாயு வு
ண்டுஅகதவாயுவைமந்திரவுச்சாடனம்செய்து அந்த மந்
திரிபேரிலே குதிக்கவிட்டார் அதுகண்டுமந்திரியும்வெட்
கித்தலையிறங்கிக்கொண்டான். அதைசோழராஜன்பார்
த்துப்பயந்து எழுந்திருந்து நற்கீரரை அங்கீகரித்தும்மு
டையமகிமையைப்பார்க்கத்தக்கினபேர்யாவரென்று நற்
கீரரைத் தழுவிக்கொண்டு நல்லவார்த்தைகளைச்சொல்லி
த்தேவரீர் அநுக்கிரகத்தினாலே தமிழறிவாளையெழுப்பி
இரட்சிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துக் கொ
ண்டான் அப்போழுது நற்கீரர்சந்தோஷப்பட்டுஅவளை
எடுத்துவரச்சொல்லென்று ரப்படியேபோய் தமிழறிவா
ளையெடுத்து ஒருகட்டிலின்பேரில்போட்டுகொண்டுவந்து
நற்கீரர்முன்னே வைத்தார்கள் பட்டணத்திலுண்டான
சகலசெனங்களும் வந்துபுதுமையாகப்பார்த்துக்கொண்
டிருக்கிற சமையத்திலே நற்கீரதேவருந்தமது கமண்டல
த்தில் சலங்கொண்டுவந்து அபிமந்திரித்துத் தமிழறிவா

ள் பேரிலேயிறைத்துச்சொன்னதான.

வெண்பா-வீருயிவளுக்குமிக்கோரும்வேந்தனுக்கு
மாருகநாம்வந்தவாரறியக்-கூருல்
விழுந்தநிணமுள்ளடிக்கிவெள்ளெலும்புமொன்ரு
யெழுந்திருக்கவேண்டுமினி.

என்றுசொன்னவுடனேவயிறு பீறுண்டுசரிந்து விழுந்திருந்த நிணமனைத்துமுள்ளடக்கி ஒன்ருகப்பொருந்திநித்திரை கொண்டிருந்து நீங்கினவள்போலத்தமிழறிவாள் விழித்துப்பார்த்தந்தக் கவிக்குப்பயன்சொல்லிக்கொண்டெழுந்திருந்தாள் பயன்சொன்னவிபரம் பாரை பாரையென் றெழுந்திருந்தாள் அதற்குநற்கீரதேவர் சொன்னவிபரம் பூரைபூரையென்ருர் அதன்பிறகு அந்தச்சபையைப்பார்த்து வெட்கித்தலையை யிறங்கிக்கொண்டு நின்ருள் நின்றவளைப்பார்தது நற்கீரர் சொன்னதாவது.

வெண்பா-சிறந்ததமிழின் றிறமறியமாட்டா
திறந்தனேயோவுந்தனைக்கொன்ருமோ—அறிந்த
செந்தமிழிண்சோழக்குச் சேரவந்துநின்றுதொழுஞ்
சொந்தமுன்னுச்சியுடன்சொல்.

என்றுநற்கீரதேவர்சொல்லத் தமிழறிவாள்சோழராசனைப்பார்த்துச் சொன்னதாவது.

வெ-நானுேபழிபடைத்தேன் நடாதென்னுருயிரை
யாதேனுர்கமலத்திசைமுகனுர்-தானே
தலையோட்டிலுள்ளபடி தப்புமோசொல்லீர்

கலைக்கோட்டுமாமுனியேகாண்.

என்றுதமிழறிவாள் சொல்லச்சோழராஜன் அந்த வசனத்தைக்கேட்டு சந்தோஷிக்கத்திரும்பவுந் தமிழறிவாள்சொல்வாள் தமிழுக்குஅகஸ்தியனும் வடமொழிக்குப்புலத்தியனு மிவர்களுடைய கல்வியை அறியும்போதுஎன்னை யொழியமற்றொரு மில்லையென்றிருக்கவேண்டாம் கல்வியதிகங்கொண்டு பிர்மனானவர் சரஸ்வதியை நாவிலேதரித்துக்கொண்டார் விஷ்ணுவானவர்மார்பிலே தரித்துக்கொண்டார் ஈஸ்வரன் சங்கத்தின்கீழேயிருக்கிறார் என்றுசொல்ல சோழராஜன் சந்தோஷப்பட்டுத்தமிழறியும் பெருமாளைக்கையை பிடித்துக்கொண்டு நற்கீரர்கையிலேகொடுத்து இவளை நான்பெற்றபெண்ணாகவளர்த்தேன் இந்தப்பெண்ணைத்தேவரீர்கலியாணம் பண்ணிக்கொள்ளும் உமக்குவேண்டிய ராச்சியமும் விட்டுச்சிற்று திரவியமுங்கொடுக்கிறேனென்றுசொன்னான் அந்தவிசேஷம்கேட்டு நற்கீரர் சோழராஜனைப் பார்த்து சொன்னதாவது.

வெண்- ஆரோர் கடமையடைவுடனே கொண்டுமிக
வீறாயுலகாளும்வேந்தனே-கூறாய்
யெனக்கிவளுமேமகள்காணென்றன்மருகன்
றனக்குரியாளாவளினிதான்.

என்றுசொல்லக்கேட்டுச் சோழராஜன்ஏனையாமகளென்கிறீர் அப்படிச்சொல்லவேண்டாம் இவளைக்கலியாணம்செய்துக்கொள்ளுமென அதற்குநற்கீரர்சொல்

லுவார் இப்போது செத்தவளைத்திரும்பவும்நாமெழுப்பி னேமே ஆனபடியினலே நமக்குமகளல்லவோ இதுவுமல் லாமல் நம்முடைய மருமகன்ஒருபையனிருக்கிறன் அ வனுக்குஇவளைக் கட்டிவைக்கவேண்டு மென்று வெகுபி ரயாசைப்பட்டு இராத்திரியெல்லா மிவளுடனேதர்க்கித் தோமென்றார் அதுகேட்டுச்சோழராசன் சந்தோஷப் பட்டுத் தேவரீர் மருமகனுக்குக்கொடுக்க நாங்களெத்த னைபுண்ணியம்பண் ணினேம் அப்படியேமருமகனை யழை ப்பியுமையாவென்றான் அதுகேட்டு நற்கீரதேவர் அங் கேயிருந்தபடியேதானே அடாவிறகுதலையா இங்கேவா டாவென்று கூப்பிட்டழைத்தார் அந்தவிசேஷங்கேட்டு விறகுதலையன் பாசிப்பல்லும் பூதமுகமும் வெந்தவீட் டுக்கழிமரம்போல காலுங்கையும் அரையிற்சுற்றியகொ டியும் அதிலே சொருகிய அரிவாளும் இந்தவிதமான கோலத்துடன்வந்து நின்றான் இப்போது தமிழறிவா ளும் பார்த்து முன்னலே நாம்இவனைக்கடைத்தெரிவிற் கண்டுகோரியுமிழ்ந்தோமோ அவன்தான் வந்தான் என்ன அதிசயமென்று வெழ்க்கித்தலையிறங்கிக்கொண்டு வெகு வாய் மனதுசஞ்சலமாயிருந்தாள் சோழராஜனுங்கண்டு மிகவும் வியாகூலத்துடனே நற்கீரரைப்பார்த்து சுவாமி இவளிருந்தயிருப்பும் இவள்நடப்படிக்கையும் வெகு பிர காசமாய்க்கீர்த்தி யடைந்திருந்ததும் இராச்சியமுழுது மறியுமே அப்படிக்கொத்தவளை இப்படிக்கொத்தவனுக் குக் கட்டியிருக்கிறேமென்றாலதற்குநான்சொல்லப்போ

கிறதென்னவிருக்கிறது தேவரீர் சித்தத்துக்குச்சரியா னபடிசெய்துகொள்ளுங்களென்றான் அப்போது தமி ழறிவாளும் நற்கீரர்பாதத்தில் சாஷ்டாங்கதெண்டனிட் டுகைகட்டிநின்றுகொண்டு சொன்ன.

வெண்பா-பாதப்பணிந்தேன் பழையதமிழ்முனியே
ஏதுமறியேனினியுரையேன்-பேதையேன்
செய்பிழைபொருத்துச் சித்தத்துக்கேற்றபடி
செய்வித்துக்கொள்ளுமினி.

என்றுசொல்லிச்சிந்தைவியாகூலமாய்நொந்து கொண்டிருந்ததமிழறிவாளையுஞ் சோழராஜனையும்பார்த்து நற்கீரதேவர்முற்பிறப்பு உணர்த்தியவிபரங்கேளுஞ்சோழராஜாவே, முன்சென்மத்திலேயிந்த தமிழறிவாள்ராஜகுமாரத்தி, இவர்களிரண்டுபேரும் இச்சையானதும் சாவடியிலே இவனையிருக்கச்சொல்லி ஓலையெழுதிப்போட்டது, அங்கேவந்து இரண்டுபேரும் சீவனைப்போக்கிக்கொண்டு ஆவேசமாயிருந்ததும், ஒளவையார் கையிலே வறம்பெற்றதும், பிற்பாடு இவள்வந்து மரகதவடிவிவயிற்றிலே பிறந்துதமிழறிவாளானதும் இராஜகுமாரன் போய் விறகுதலையன் வயிற்றிலேபிறந்ததும் பூருவம் இவளுக்குபிர்மாசிருஷ்டிப்பு ஐம்பதுவயது அதிலேபன்னிரண்டுவயது கன்னிகழியாதிருந்ததும் ஒருவருஷம் ஆவேசமாயிருந்ததும் அப்பால் இப்போது இருபத்தைந்துவயது கன்னிகழியாமலிருந்ததும் இந்தப்பிறப்பிலே பன்னிரண்டுவருஷமும் அந்தராஜகுமாரனுடனே கூடி

வாழத்தக்கதாக நற்கீரர்வந்து ஒரு ராத்திரியெல்லாம் இவளுடனே கதாப்பிரசங்கம்செய்து ஜெயிப்பாரென்று ஔவையார் சொல்லிப்போனதும் இவைகளையெல்லாம் ஆதியோடந்தமாகித் தெரியத்தக்கதாக முற்பிறப்புணர்த்திச்சொல்லிக்காண்பித்தது அப்போது ஔவையார் என்பேரைக்குறித்துச்சொலிப்போனபடியினாலேநாம் வந்துபுத்தி செலுத்தினோமென்றார் அப்போது சோழராஜனுந் தமிழறிவாளும் மரகதவடிவும்நற்கீரரைநமஸ்கரித்து தேவரீர் சித்தத்திற்குச் சரியானபடி செய்து கொள்ளுமென்றார்கள் அப்போது நற்கீரதேவரும்தமிழறிவாளைப்பார்த்துச் சொன்னதாவது.

வெண்-ஊருமுறையூரே ஒண்டொடியாங்கன்னிகையின்
பேருந்தமிழறிவாள் பேராமோ—நேரா
யுனைவிரும்புவானை யுன்றெய்வந்தந்த
மனையிடத்துப் போயிருந்துவாழ்.

என்றுசொல்லிக்காண்பித்து அந்நேரமே பச்சைப்பந்தல்போடுவித்து நல்லமுகூர்த்தவேளையிலே அந்த விறகுதலையனுக்குத் தமிழறிவாளைக் கலியாணம்செய்து வைத்துச்சோழராஜனைக்கொண்டு இவர்களிருப்பதற்கு உப்பரிகையும் ஊரும்விடுவித்து பூஷணவகைகளுங்கொடுப்பித்து நீங்களிரண்டு பேருஞ்சுபமாக வாழ்ந்திருந்து ஔவையார் அநுக்கிரப்படிக்குச் சிவனுடையபாதாரவிந்தஞ் சேரக்கடவீர்களென்று ஆசீர்வதித்து அனுப்பிவித்துக்கொண்டு தங்களரண்மனைக்குப்போனார்கள் பிற்

பாடு நற்கீரருக்குச் சோழராஜன் ஒருவரிபூஷணங்கட்டு வர்க்கமுங்கொடுத்துப் பச்சைப்பல்லக்குமிட்டு நமஸ்கரித்து நற்கீரதேவரை மதுரைக்கு அனுப்பிவைத்தான்நற்கீரதேவருஞ் சோழ ராஜன்கையில் விடைபெற்றுக்கொண்டு மதுரைக்குவருகிறபோது பாண்டியராஜாவும் சங்கத்தாரும் எதிர்கொண்டுவந்து சந்தோஷப்பட்டு நற்கீரதேவரை யழைத்துக்கொண்டுபோனார்கள் நற்கீரதேவரும் உறையூருக்குப்போய்த் தமிழறிவாளைவென்றவிபரமெல்லாம் சவிஸ்தாரமாகவே தான்சொன்னார் அதுகேட்டுப் பாண்டியராஜன் மகாசந்தோஷத்தை யடைந்து நற்கீரதேவருக்குவேண்டிய வெகுமானம் கொடுத்தான் சங்கத்தாருஞ்சந்தோஷத்தையடைந்தார்கள் நற்கீரதேவருஞ் சங்கத்தாருடனே கூடிச்சங்கப்பலகையின் மீதெழுந்தருளியிருந்தார் இப்பால் தமிழறிவாளும் ஔவையார் அனுக்கிரகப்படிக்கு இருபத்தைந்து வயதளவுங் கன்னிகழியாமலிருந்தபின்பு நற்கீரதேவர் அருளினால் பூருவோத்திரமறிந்து பனிரண்டு வருஷம் வரைக்குஞ் சகலசம்பத்தையும் சவுக்கியமாய் அதிகசந்தோஷத்துடனே அனுபவித்துக்கொண்டிருந்து பிற்பாடு இருவரும் மோட்சத்தை யடைந்தார்கள்.

தமிழறியும்பெருமாள் கதை.

முற்றிற்று.